# ।। श्रीरामदास उपासना पद्धति ।।

भाग - १

# SRI RAMADASA UPASANA PADDHATI

## Part -1

Thanjavur Maharaja Serfoji's

**SARASVATI MAHAL LIBRARY AND RESEARCH CENTRE**

**Thanjavur**

MA.3056

Thanjavur Sarasvati Mahal Series No. 588

।।श्रीः।।

# ।। श्रीरामदास उपासना पद्धति ।।

भाग – १

# SRI RAMADASA UPASANA PADDHATI

## Part - I

Edited by

**B. RAMACHANDRAN,** M.A.,
Marathi Pandit,
Sarasvati Mahal Library, Thanjavur.

THANJAVUR MAHARAJA SERFOJI'S

SARASVATI MAHAL LIBRARY
AND RESEARCH CENTRE

THANJAVUR.

2017 Price: Rs. 100-00

# BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title | : Sri Ramadasa Upasana paddhati Part- I |
| Editor | : B. Ramachandran M.A., |
| Publisher | : Director, Sarasvati Mahal Library & Research Centre, Thanjavur. |
| Publication | : 588 |
| Language | : Marathi & Tamil |
| Edition | : First Edition |
| Date of Publication | : 2017 |
| Paper used | : 18.6 kgs. T.N.P.L. |
| Size of the Book | : 21 x 14 c.m. |
| Printing Type used | : 18 & !2 pt. |
| Number of pages | : 104 |
| No. of copies | : 500 |
| Printer | : Sarasvati Mahal Library |
| Binding | : Cardboard |
| Subject | : Stotra |
| ISBN | : 978-93-85343-26-1 |
| Price | : Rs.100.00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தமிழகத்தின் கலை மற்றும் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சைமாநகரத்தில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகத்தை அணி செய்கின்ற அரிய சுவடிகளில் வெளிவராதவற்றை தேர்வு செய்து அவற்றை மொழிப்பண்டிதர்கள், துறை வல்லுநர்கள் மற்றும் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களை நியமித்து அவர்களைக் கொண்டு நூல்களாக பதிப்பித்துவெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் ஸ்ரீ ராமதாஸ உபாஸனா பத்ததி - பகுதி - 1 என்னும் தலைப்பில் இந்நூல் வெளியிடப்படுகிறது.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் மராத்தி மொழிப் பிரிவில் சமர்த்த ராமதாஸர் இயற்றிய "கருணாஷ்டகம்" எனும் ஸ்தோத்திர படைப்பு நூலக காகிதச் சுவடியாக 1685, D.No. 2008 மற்றும் சுவடி எண். 2528 ஆகிய எண்களில் காணப்படுகின்றன. அவற்றை தொகுத்து "ஸ்ரீ ராமதாஸ உபாசனா பத்ததி பகுதி-1" என்னும் தலைப்பில் ஸ்ரீசமர்த்தரின் கருணா ஸ்தோத்தர படைப்புகளின் தனிச்சிறப்பை தமிழில் வெளிக்கொணர வேண்டும் என்ற நோக்கத்தில் பதிப்பிக்கப்படுகிறது. கருணாஷ்டகம் என்பது கருணை ரஸ பாவத்துடன் எளிய ஸ்லோகங் களாகவும், இறைவனிடம் தயை வேண்டி ஆழ்ந்த பக்தியுடன் படைக்கப்பட்ட கவிதைப் படைப்பாகும். இந்நூலில் ஐந்து பகுதிகளாக எட்டு ஸ்தோத்திரங்கள்

மட்டுமல்லாமல் இன்னும் பல ஸ்தோத்திரங்களும் காணப்படுகின்றன. இந்நூலின் பதிப்புப் பணியை செவ்வனே செய்தளித்த இந்நூலக மராத்தி பண்டிதர் திரு. B. ராமச்சந்திரன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. மா. இராமகிருட்டினன், எம்.ஏ.,எம்ஃபில்.,எம்.எட்., அவர்களுக்கும், நூலகர் முனைவர் எஸ். சுதர்ஷன். M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், ஒளியச்சு மற்றும் கணினி அச்சகப்பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூல் ஆன்மீக அன்பர்களுக்கும், ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், பெரிதும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

தஞ்சாவூர்
20.10.2017

**ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# प्रस्तावना

श्री समर्थ रामदास स्वामी यांनी प्रत्येक साधकाचे विवेकाने विचार करून शाश्वत सुख प्राप्ती हाच एक खरा विचार आहे अशी मनाशी बाळगावा व त्यासाठी उपासना हा सर्वात सोपा मार्ग आहे. भक्तित उत्कटता प्राप्त व्हावी यासाठी उपासना आवश्यक आहे. याच कारणामुळे प्रत्येक सांप्रदायामध्ये उपासनेला विशेष महत्व प्राप्त झाले आहे.

उपसना याचा थोडक्यात अर्थ म्हणजे माणसाने इश्वरा जवळ जाणे अगर ईश्वरा जवळ वासकरणे हा होय. आनंदाचे वास्तव्य प्रत्येक व्यक्तीच्या हृदयात असते व ईश्वराशी अभिन्न असते. प्रत्येक व्यक्तिच्या शरीरात असणारा आत्मा विश्वाचे अदृश्य अधिष्टान आहे. या आत्मिक मूल्यता समर्थ 'परमार्थ' म्हणतात व शरीर विषयक मूल्याला ते 'प्रपंच' म्हणतात. म्हणून प्रपंचातूनच परमार्थ साद्यता येतो असे समर्थांचे सांगणे आहे.

म्हणौन सावधपणे । प्रपंच परमार्थ चालविणे ।
ऐसे न करीता भोगणे । नाना दुःख ।।

।। दासबोध – १२–१–१०।।

उपासनेने ईश्वराजवळ जाण्याने मनुष्याला निरतिशय आनंद प्राप्त होतो. म्हणजेच मोक्ष प्राप्त होतो. म्हणून सर्व–धर्म–पंथां मध्ये उपासनेला

मोठे महत्व प्राप्त झालेला आहे.

आता आपण रामदासी संप्रदायाची लक्षणे पाहू-

**१) संप्रदायाचे दैवत -**

स्वरूप संप्रदाय अयोधया मठ । जानकी देवी श्री रघुनाथ दैवत ।
मारुती उपासना नेमस्त । वाढविला परमार्थ रामदासी ।।

**२) संप्रदायाची परंपरा -**

नमो आदि बोधात्मरूपा परेशा । नमो हंस नारायणा निर्जरेशा ।
नमो ब्रम्हदेवा वसिष्ठा श्रीरामा । नमो मारुती राम दासाभिरामा ।।

**३) संप्रदायाचे ग्रंथ -**

आत्माराम दासबोध । माझे स्वरूप स्वतः सिद्ध ।
असता न करावा खेद । भक्त जनी ।।

या शिवाय मनाचे श्लोक, इतर लघुकाव्ये समर्थांनी लिहिली आहेत तीही अवश्य पाहावीत.

**४) संप्रदायाचा उद्घोष ।**

।। जय जय रघुवीर समर्थ ।।

**५) संप्रदायाचा मंत्र ।**

।। श्रीराम जय राम जयजय राम ।।

**६) नियमाच्या वारीचे स्थळ ।**

चाफळ, सज्जनगड, जांब

**७) संप्रदायाचे तत्त्वज्ञान ।**

१) आधी ते करावे कर्म । कर्म मार्गे उपासना ।
उपासका सापडे ज्ञान । ज्ञाने मोक्षचि पावणे ।। (मान पंचक)

२) उपासना म्हणिजे ज्ञान । ज्ञान पाविजे निरंजन ।
योगियांचे समाधान । येणे रितीं ।। (दासबोध -२०-४-२२)

थोडक्यात असे म्हणता येईल की समर्थांच्या तत्वज्ञानात क्रियाशील व्यवहार बद्दल फार महत्व आहे. व्यवहार हा कर्म प्रधान आहे. कर्मातूनच प्रचंड शक्ति निर्माण करता येते. कर्म म्हणजे यत्न (यत्नाचा लोक भाग्याचा) (यत्नेवीण दरिद्रता) म्हणून कर्मापाठोपाठ, उपासना करणे व त्यातून बुद्धीचा उपयोग करणारी, आचरणाने व चारित्र्याने शुद्ध असणारी, निःस्वार्थी, बलदंड व बेडर महंतांची संघटना उभी करता येते. त्यातून समाजाचे प्रबोधन करून, त्यातून प्रचंड जन शक्ति निर्माण करणे हे धर्म उपासनेचे प्रमुख कार्य आहे. समाजाला धर्माचे अधिष्टान असल्या शिवाय राज्य क्रांती करता येत नाही.

परमार्थी तो राज्यधारी । परमार्थ नाही तो भिकारी ।
या परमार्थाची सरी । कोणास ध्यावी ।। (दासबोध-१-१०-२३)

उपासनेचा मोठा आश्रयो । उपसनेवीण निराश्रयो ।
उदंड केले तरी तो जयो । प्राप्त नाही ।। (दासबोध-१६-१०-२९)

व उपासकासी सूचना । उपासना उपासना असा आग्रही उपदेश केला आहे.

या संप्रदायाच्या उपासने मध्ये पुढील भक्ति क्रियांचा अंतर्भाव होतो.

काकड आरती प्रभात काली म्हणावयाचे मनाचे श्लोक सद्गुरु स्तवन, देवपूजा, जप, भिक्षा, कीर्तन, प्रवचन, करूणाष्टके, भजन, आरती, दासबोध वाचन व शेजारती ई. होय. यातील जितक्या प्रकारांनी उपासना करता येईल तेवढया प्रकारांनी दैनंदिन उपासना करावी.

अशी या ''रामदास उपासना पद्धती'' म्हणावया हा ग्रंथ प्रसिद्ध करणेस आज्ञा दिलेली जिल्लादीकारी व सरस्वती महाल ग्रंथालयाच्या संचालक मा. श्री. आ. अण्णातुरै, I.A.S., यांनाही, तसेच ग्रंथाच्या काम पूर्णपणे होणेस सहकार्य केलेले मा. श्री. मा. रामकृट्टीनन् M.A.M.Phil.,M.Ed., यांनाही, या ग्रंथाच्या तपासनी काम केलेले मा.श्री.म.रा.जोशी, नागपूर यांनाही, या ग्रंथालयाच्या ग्रंथपाल मा.एस.सुदर्शन, M.A.,B. Lit.,M.L.I.S.Ph.D., यांनाही, तसेच या ग्रंथ पूर्णपणेबाहेर येण्या साठी तळमळीणे काम केलेले, तसेच अल्प काळात उत्कृष्ठ छपाई बांधणी करून दिल्याबद्दल ग्रंथालयाचा मुद्रीत विभाग यांनाही माझा ऋणी आहे. श्री समर्थ रामदास स्वामी यांचे करुणारस भरलेल्या हा ग्रंथ सर्वांना अभ्यासासाठी उपयोग होईल, असा मला मनोमन विश्वास आहे.

।। जय रघुवीर ।।

तंजावूर
२८.०९.१७

**बी. रामचंद्रन,** एम.ए.,
मराठी पंडित,
सरस्वति महाल ग्रंथालय

# முன்னுரை

மஹாராஷ்டிர மன்னர் சத்ரபதி சிவாஜியின் சகோதரர் வெங்கோஜி என்கிற ஏகோஜி கி.பி. 1776-ல் தஞ்சையின் முதல் மன்னராக முடிசூட்டிக்கொண்டார். அன்று முதல் தஞ்சை மாநகரம், மராட்டியர் ஆளுகைக்குள் வந்தது. இவர் காலத்தில் மஹாராஷ்டிரத்தில் போசல குல மன்னர் சத்ரபதி சிவாஜிக்கு ஆன்மீக குருவாக சமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் விளங்கினார். ஸ்வாமிகள் மன்னரால் மிகவும் மதிக்கப்பட்டார். சத்ரபதி சிவாஜியின் வேண்டுகோளின்படி ராமதாஸ் ஸ்வாமிகள் தஞ்சைக்கு வந்து ஏகோஜி மன்னருக்கு ஆன்மீக போதனைகள் செய்து அருள் செய்தார். ஏகோஜியின் வேண்டுகோளின்படி ஸ்வாமிகள் தன் முக்கிய மூன்று சீடர்களை தஞ்சை பிராந்தியத்திற்கு அனுப்பி ராமபக்தி பிரசார கேந்திரங்களை (மடங்களை) அமைக்க வழி செய்தார்.

சமர்த்தரின் பதிமூன்றாவது சீடரான பீகாஜி பாவா ஸஹபூர்கர் என்னும் பீம ஸ்வாமிகள் பிரசார கேந்திரம் தஞ்சையில் அமைத்தார். மன்னார்குடியில் அனந்த மௌனி ஸ்வாமிகள் மற்றும் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் அருகில் உள்ள கோனூர் எனும் சிற்றூரில் ராகவ ஸ்வாமிகளும் ராமபக்தி பிரச்சார கேந்திரத்தை அமைத்து, ராமதாஸ ஸ்வாமிகள் சம்பிரதாயத்தை வளர்த்தனர். தஞ்சை மன்னர் ஏகோஜி இம்மூன்று பக்தி பிரசார கேந்திரங்களும் சிறப்புடன் நடக்க நிலக்கொடை ஈந்து வழி செய்தார்.

தஞ்சையில் அமைந்த முதல் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ சம்பிரதாயியான ஸ்ரீ பீமராஜ கோஸ்வாமிகளிடத்தில் ஸ்ரீஅண்ணாஜி (ஆத்மாராம்) பாவா, ஸ்ரீஜோளி (ராம்) கோஸ்வாமி, ஸ்ரீ கோவிந்தபாள ஸ்வாமி ஆகிய மூவரும் அனுக்கிரஹம் பெற்று சிஷ்யர்களாகி ஸ்ரீ ஸ்வாமி களிடத்தில் முறையே , யோக தண்டம், பிக்ஷை எடுக்கும் பை, ஸ்ரீகளின் பாதுகை இவற்றைப் பெற்றும், தஞ்சையில் தனித்தனியாக தங்கள் மடங்களை நிர்மாணித்துக் கொண்டும் ஸ்ரீ சமர்த்த சம்பிரதாய பக்தி மார்கத்தை வளர்த்தனர். இந்த மூன்று பரம்பரை மடங்கள் இன்றும் சிறப்புடன் தங்கள் அறப்பணிகளை செய்து வருகின்றன.

தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் மராத்தி மொழிப் பிரிவில் சமர்த்த ராமதாஸர் இயற்றிய நூல்களான ஸ்ரீமத் தாஸபோதம், ஆத்மாராம், மனாசே ஸ்லோகம், சுந்தர காண்டம், கருணாஷ்டகம், ஸ்தோத்திர படைப்புகள் மற்றும் பாடல்கள் எண்ணற்ற அளவில் காணப் படுகின்றன. அவற்றில் சமர்த்தர் இயற்றிய "கருணாஷ்டகம்" எனும் ஸ்தோத்திர படைப்பு நூலக காகிதச் சுவடியாக 1685, D.No. 2008 மற்றும் சுவடி எண். 2528 ஆகிய எண்களில் காணப்படுகின்றன. அவற்றை தொகுத்து "ஸ்ரீ ராமதாஸ உபாசனா பத்ததி பகுதி-*1*" என்னும் தலைப்பில் ஸ்ரீசமர்த்தரின் கருணா ஸ்தோத்தர படைப்புகளின் தனிச்சிறப்பை தமிழில் வெளிக்கொணர வேண்டும் என்ற நோக்கத்தில் வெளியிடப்படுகிறது.

இந்நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூற்பணியினைச் செவ்வனே நிறைவேற்றிடத் துணைபுரிந்த நூலக நிருவாக அலுவலர் திரு. மா. இராமகிருட்டினன், M.A.,M.Phil.M.Ed., அவர்களுக்கும், இந்நூலை நுண்ணாய்வு செய்துகொடுத்த திரு. மதுகர் ராமதாஸ் ஜோஷி, நாக்பூர் அவர்களுக்கும், இந்நூலக நூலகர் முனைவர் எஸ்.சுதர்ஷன், M.A.,B.Lit.,M.L.I.S.Ph.D., அவர்களுக்கும், இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலகக் கணினிப் பிரிவினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் மற்றும் உடன் பணியாற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
*28.09.2017*

**B.ராமச்சந்திரன்,** எம்.ஏ.,
மராத்தி பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,

# நான்முகம்

பன்னிரண்டு வருட காலங்கள் புரஸ்சரணம் செய்து ஞானம், வைராக்கியம் மற்றும் சாமர்த்தியம் கிடைக்கப்பெற்று சமர்த்த ராமதாஸர் தீர்த்த யாத்திரைக்கு புறப்பட்டார். இக்காலம் சுமாராக கி.பி. 1632 முதல் கி.பி. 1639 ஆகும். தீர்த்த யாத்திரை நிமித்தமாக இந்த பாரத தேசம் முழுவதும் பல்வேறு ஆசார - விசாரங்கள் கொண்ட மக்களிடம் ஸஹவாசம் கொண்டிருந்தார். ஆகையினால் பல ஊர்களில் சென்று நாட்டு நடைமுறை களை அறிந்து அங்கு மக்கள் எவ்வாறெல்லாம் அவதிப்படுகிறார்கள் என்பதை நன்கு தெரிந்துகொண்டார். சமுதாயம், அரசாட்சி, நிதிநிலைமை இவை யாவும் சீர்கெட்டுக் காணப்பட்டது. மக்கள் யாவரும் பீதியுடன் காணப்பட்டனர். பெண்களும் பாதுகாப்பின்மையால் அவதியுற்றனர். வேறு பல கட்டாயத்தின் பேரில் மத மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு துன்பப்பட்டனர். இந்து தர்மத்தை அழித்திட சிலர் திட்டம் தீட்டினர். கோயில்கள் சூறையாடி அங்குள்ள விக்கிரகங்களை பங்கப்படுத்தினர். நல்லொழுக்கத்துடன் வாழும் சிந்தனையுடையவர்கள் சிலர் இருந்தபோதிலும் நற்செயல்கள் செய்வது கடினமானதாகவே தோன்றியது. நீதி, நியாய தர்மத்துடன் செயல்படும் நல்லாட்சி செய்யும் தலைமை இல்லாததினால் சமுதாயம் சீர்கெட்டுப் போகும் அளவிற்கு அதர்மம் தாண்டவம் ஆடியது. தர்மத்தையும், இறைவழி பாட்டையும், அந்தணர்களையும் ரக்ஷிக்க வேண்டும். அவ்வாறே நாடெங்கிலும் இந்து தர்மத்தின் ஆட்சி நிலை நாட்டிட வேண்டும் என்ற சிந்தனை சமர்த்தருக்குத் தோன்றியது.

நாடெங்கிலும் மோசமான பொருளாதார சூழ்நிலை நிலவியதால் எங்கு காணினும் வறுமை தாண்டவமாட உண்ண உணவும், உடுக்க உடையும் இன்றி மக்கள்

தவித்தனர். மேலும் கொலை, கொள்ளை, கபளீகரம், வழிப் பறி, பெண்களைக் கடத்துதல், கட்டாய மதமாற்றம் செய்தல், அநீதி, அநியாயம், கோயில்களில் கொள்ளையடித்தல், இவை யாவையும் கண்ணுற்ற சமர்த்த ராமதாஸரின் மனம் கொதித் தெழுந்தது. இவ்வாறான அவஸ்தைகளிலிருந்து மக்களைப் பாதுகாத்திட எண்ணி அவர்களுக்கு நல்வாழ்வு அமைந்திட இறைவனிடம் கருணை வேண்டி பிரார்த்தனை செய்து, இந்த கருணாஷ்டக ஸ்தோத்திரங்களை எழுதத் தொடங்கினார்.

கருணை என்றால் தயை, அஷ்டக என்றால் எட்டு சரணங்கள் அல்லது எட்டு ஸ்லோகம் ஆகையினால் கருணாஷ்டகம் என்று அழைக்கப்பட்டது. இருப்பினும் அஷ்டகத்தில் படைக்கப்பட்ட எல்லா ஸ்லோகங்களும் எட்டு எண்ணிக்கையுடன்தான் இருக்கிறது என்று கூற முடியாது. சிலவற்றில் எட்டு ஸ்லோகம் இருக்கலாம். சிலவற்றில் ஐந்து, பத்து, ஒன்பதாக இவ்வாறாகவும் காணப்படலாம்.

கருணாஷ்டகம் என்பது கருணை ரஸ பாவத்துடன் எளிய ஸ்லோகங்களாகவும், இறைவனிடம் தயை வேண்டி ஆழ்ந்த பக்தியுடன் படைக்கப்பட்ட கவிதைப் படைப்பாகும்.

கருணாஷ்டகம் எனும் ஸ்தோத்திரப்படைப்பு ஐந்து பகுதிகளாக எட்டு ஸ்தோத்திரங்கள் மட்டுமல்லாமல் இன்னும் பல ஸ்தோத்திரங்கள் காணப்படுகின்றன.

**1. ஸ்ரீ சமர்த்தரின் ஆத்ம சரித ஸ்லோகங்கள்**

1. ஸமர்தானா படலேலே கோடே (ரகுநாயகா காய கைஸேகராவே), 2. உதாஸீன ஹா காள கோடே ந கண்டே, 3. துஜவீண ராமா மஜ கண்ட வேனா, 4. அனுதின அனுதாபே தாபலோ ராமராயா, 5. புத்தி தே ரகு நாயகா, 6. ஸ்ரீ ராமாசே உபகார, 7. பிரபு தர்சன, 8.பரசுராமாசி பிரார்த்தனா, 9. பஹே

காவசா மாருதி, 10. பனிவர உடவீலா, 11. சாபள் ஸ்ரீ ராமாசே ஆகமன 12. வர்ஷா காலீன வனஸ்ரீ, 13. ப்ரஸங்க பரா வாயீட.

**2. ஸ்ரீ சமர்த்தரின் மனநிலை ஸ்தோத்திரங்கள்**

14. ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா, 15. உதாசீண ஹே விருத்தி கோடே ந லாகே, 16. பவாசா வீட, 17. துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸி ஆலோ, 18. நிஸ் ப்ருஹ, 19. ராமாவர பார, 20. ஸர்வோத்தமா கை மஜ பேட தேஸீ, 21. சுக துக்க மஜ மாஜே, 22. ஸ்வதந்த்ர ஸ்லோக, 23. ஸ்ரீ சமர்த்தாஞ்சி நிஷ்டா, 24. ஸ்ரீ ராமாசே ப்ரீத.

***3. ஸ்ரீ சமர்த்தரின் ஸாதகத்தின் இறுதி மார்க ஸ்லோகங்கள்***

25. தேஹாவஸ்தா, 26. ஸஹாணே, 27. கர்வ, 28. அபிமான, 29. ஞானமார்க்க, 30. சுபுத்ர, 31. தேஹ கர்ம, 32. பேடோ கோணி யேக நர, 33. பரநிந்தா, 34. நிந்தக, 35. ப்ரபஞ்சாசே வேட, 36. சஞ்சித, 37. அனாதி அனந்த கால, 38. சேகீஜிவே சாண்டுனி ஸர்வ ஜாவே, 39. நித்யா நித்ய, 40. ஆஷா ப்ரபஞ்சி, 41. ஸாவத ஹோயீ, 42. வ்ருத்தாப காள, 43. நிரூபண மானஸ ஆவராவே, 44. பரம சுந்தர தே பத பாவஸி, 45. ஸாயோஜ்ய தேசி வாட, 46. முக்தா ஆணி பத்ததா, 47. ஸீதள சாயா, 48. சங்கட விமோசக ராம, 49. கரா தேவ, 50. விஷமதா, 51. நிராகார, 52. ஆத்ம நிவேதன பக்தி, 53. ஸாஸ்வதாசா நிச்சயோ, 54. அத்வைத சர்ச்சா-**1**, 55. அத்வைத சர்ச்சா - **2**, 56. குஹா, 57. க்ரந்த கோட்யான கோடி, 58. ஹரி கீர்த்தன்,

**4. ஸ்ரீ சமர்த்தரின் சகுணோபாஸனை ஸ்தோத்திரங்கள்**

59. நமன, 60. பிரார்த்தனா, 61. தீன வத்ஸல தேவ 62. ராம, 63. வீதராகீ ராம, 64. ராகவ நீர விலா,

65. கிருஷ்ணபர, 66. ரவிகுலதிலக, 67. ராம குண, 68.ராம மஹிமா, 69. ராம பஞ்சாயதன, 70. ஸ்ரீ ராம ராம ஹேமனா, 71. குலதேவி துளஜா பவானி ஸ்தோத்திர, 72. ப்ரஸன்ன முக சுந்தரா, 73. அகடித தே தே உதண்ட கேலே, 74. ப்ரபஞ்சி ஆமசே குலீ, 75. பாளகா வாடவீ மாதா.

**5. ஸ்ரீ சமர்த்தரின் சமுதாய நல ஸ்லோகங்கள்**

76. விரோத, 77. ஸ்ரீ சமர்த்தாஞ்சி இச்சா, 78. ஸார, 79. ஜனி ஜானிஜே மோக ஹா சுக்ருதாசா, 80. ராம ராஜ்ய 81. உத்தம குண மஜ தே ரே ராம், 82. ஸ்புட ஸ்லோகம்.

கருணாஷ்டகம் எப்போது எழுதப்பட்டது என்பதற்கான குறிப்பு எங்கும் தென்படவில்லை. சில சமர்த்த பக்தர்கள் மற்றும் இலக்கிய வல்லுநர்கள் சமர்த்தருடைய இலக்கிய படைப்புகளை பலவாறு வரிசைப்படுத்துகின்றனர்.

ஓவ்யா சதகம் முதலாவதும் பின்னர் பூர்வாரம்ப ஓவிபத்த ப்ரகரண, பிறகு 21 சமாஸ தாஸபோதம், ராமாயணம், மனாசே ஸ்லோகம் மற்றும் இறுதியில் 20 தஸகம் கொண்ட தாஸபோத க்ரந்தம் போன்றவையாகும் என சமர்த்த பக்தரான நானா சாஹேப் தேவ் அவர்கள் கூறுகிறார்.

முதலில் கருணாஷ்டகம், பிறகு அத்யாத்மிக ப்ரகரணம் பிறகு ராமாயணம். இறுதியில் தாஸபோதம் மற்றும் சிறு சிறு ஸ்லோகங்களாகும் என்று S.G. துல்புலே அவர்கள் தனது ஆய்வில் இவ்வாறாக குறிப்பிட்டுள்ளார்.

கோதாவரி நதிக்கரையில் 12 வருட காலங்கள் புரஸ்சரணம் மற்றும் வேதாந்த நூல்கள் கற்றுத் தேர்ந்து பல்வேறு சாதகங்களின் மூலம் கருணாஷ்டகம் இயற்றப்

பட்டது. பஞ்சவடியில் உள்ள காளாராம் கோவிலில் தினசரி ஸ்ரீ ராமரின் தரிசனம் செய்து பக்தி பாவத்துடன் ஆராதித்ததால் இப்பேர்ப்பட்ட கருணா ஸ்தோத்திரம் பிரகடனமாகியது. இவ்வாறு பல்வேறு பக்தர்களின் கருத்துக்கள் இருந்தாலும், இது மட்டும் சத்தியமாகும். அவர் தன்னுடைய இளமை பருவத்தில் உற்றார் - உறவினர்கள், வீடு-வாசல் ஆகியவற்றை துறந்து ஜப-தபங்கள் செய்திட பஞ்சவடிக்கு வந்தபிறகு, அவருடைய அப்போதைய மனநிலை, சமுதாயத்தின் வாழ்வியல் முறை யாவும் அவர் இயற்றிய கருணா ஸ்தோத்திரத்தின் வாயிலாக நம்மால் அறியமுடிகிறது. இவற்றில் சில ஸ்தோத்திரங்கள் அவருடைய அந்திம காலம் நெருங்கும் சமயத்தில் இயற்றியது போலும் தெரிய வருகிறது என்று S.G. பேண்டஸே அவர்கள் அவருடைய நூலில் தெரிவித்துள்ளார். காரணம் இந்த கருணா ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ ராமனிடத்தில் பக்தி, தயை வேண்டுதல் போன்ற எல்லா பாவங்களும் (எண்ணங்கள்) சேர்ந்தும் ராமநாம ஸ்மரணம் போன்றவற்றை இந்த ஸ்தோத்திரங்களில் காண முடிகிறது. உதாரணம்:

**தினா நாத ஹே ப்ரீத த்வா சாச கேலே,**
**தயாசேனி ஹே ஸர்வ காயா நிவாலீ,**
**உபரதி மஜ ராமி ஜாஹலீ பூர்ண காமி,**
**தாஸமணே ஆம்ஹீ கேலே பாவலோ,**
**தயேசி நாஹீ சரீ,**
**மலா கோவஸா ராம கைவல்ய தாதா,**
**தயா சேனிஹே பீடலீ ஸர்வ சிந்தா.**

சமர்த்த ராமதாஸருடைய மற்ற படைப்புகளிலிருந்து கருணாஷ்டகம் சற்று வேறுபட்டு காணப்படுகிறது. அவற்றில் இறைவனிடத்தில் இரக்க குணம் வேண்டுவதாகக்

காணப்படுகிறது. இதைப்படிக்கும் போது மனம் சாந்தம் அடைகிறது. ஆத்மானுபவம் ஏற்படுகிறது. மனதில் உண்டாகும் சஞ்சலம் நொடிப்பொழுதில் மறைகிறது. இந்த ஸ்தோத்திரங்கள் இயற்ற வேண்டும் என்று பெரு முயற்சி எடுத்து படைக்கவில்லை. இறைவனிடத்தில் ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாடாக வந்தவையாகும். கருணாஷ்டகம் ஆத்மாவின் சம்பாஷணையாகும். அல்லது ஸ்ரீ ராமனுடன் ஸ்ரீ சமர்த்தரின் சம்பாஷணை என்றும் எடுத்துக்கொள்ளலாம். இதில் நான் எங்கிற அஹங்காரம் இல்லாமல் எல்லாம் வல்லவன் ராமனே! ஆவான் என்கிற ஒரு நிலைப்பாடே. இந்த ஸ்தோத்திரத்தின் சிறப்பம்சமாகும். கருணாஷ்டகம் கேட்கும்போதும், படிக்கும்போதும் இவ்வாறான சொற்களை நாம் உணர்கிறோம்.

இந்த ஸ்தோத்திரங்களில் சமர்த்தர் தன்னை மிகவும் தாழ்த்தியும், எச்செயல் புரிவதற்கும் தகுதி இல்லாதவன் போலும், தோஷம் கொண்டவனாகவும், வெளிப்படுத்துகிறார்.

1. நவ்ஹே கார்ய கர்தா பூமி பார ஜாலோ
2. அஹந்தாமனீ ஸப்த ஞானே புடாலோ
3. துஜா தாஸ மீ வ்யர்த ஜன்மாஸீ ஆலோ
4. நஸே பக்தீ நா ஞான நா த்யான காஹீ
5. யுக்தி நாஹீ, புத்தி நாஹீ வித்யா நாஹீ விவஞ்சிதா
6. பஜனரஹித ராமா ஸர்வஹீ ஜன்ம கேலா
7. ஜடலீ உபாதி அபிமான சாதீ

   விவேக நாஹீ பஹு சாள பாதீ

எல்லாம் வல்ல ஸ்ரீ ராமபிரானின் தரிசனம் பெற்ற பிறகும் ஸ்ரீ சமர்த்தர் தன்னை தோஷமுள்ளவராக ஏன் கூறிக் கொள்ள வேண்டும்? மக்களிடம் காணப்படுகின்ற அக்ஞான

நிலையைக் கண்டு மனம் வருந்தி, அவர்களை நல்ல கதிக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற த்ருடமான எண்ணத்தில் ஸ்ரீ ராமனிடம் பிரார்த்தனை செய்கிறார். ஆகையினால் எல்லோரின் குறைகளையும் தன் குறைகளாகப் பாவித்துக் கொண்டு ராமனிடம் கருணை வேண்டுகிறார். இவருடைய இந்த படைப்பைப் பற்றி நாம் அறியும்போது இது சாதாரண மனிதரின் படைப்பு அல்ல ஸ்ரீ ராமனின் பூரண அருள் பெற்ற ஒரு மஹா புருஷரின் படைப்பு என்று நம்மால் உணர முடிகிறது. அவர் ஒரு சித்த புருஷராகவே திகழ்கிறார். இப்பேர்ப்பட்ட இவருடைய பிறப்பு நம்மைப்போன்று அன்றாடம் அல்லல்படும் சாதாரண மக்களின் தோஷங்கள் யாவும் நிவர்த்தியடைவதற்கும் நல்வழிப்படுத்துவதற்கும் என்றால் அது மிகையல்ல.

கருணா ஸ்தோத்திரங்களை படைத்த சமர்த்தர் இறுதியில் ''ராமனின் கிருபை இல்லாமல் நான் எதையும் செய்யவில்லை. எல்லாம் ராமனின் செயலே'' என்று கூறுகிறார்.

''ஆதி கேலே மக சாங்கிதலே''
(முதலில் நான் செய்தேன். பிறகு சொல்கிறேன்)

இது அவருடைய தத்துவம் ஆகும். அவருடைய வாழ் நாட்களில் இவ்வாறான சுக துக்கங்களை அனுபவித்து இதிலிருந்து விடுபடுவதற்கான ஞான மார்க்கத்தையே இந்த கருணாஷ்டகத்தின் வாயிலாக விவரித்துக் கூறுகிறார்.

கருணாஷ்டகத்தின் ஸ்வரூபம் அந்தர-பாஹ்ய (உள்ளே- வெளியே) என்ற இரு ஸ்வரூபங்களில் காணப் படுகிறது. அந்தர ஸ்வரூபம் என்பதை விளக்குவதென்றால் உள் இருக்கும் சித்தாந்தங்கள் யாவும் சாதகம் செய்யச் செய்ய சாதகர்களுக்கு நன்கு புரியும் என்பதாகும். சகுண உபாசனை- ராம உபாசனை, பரமார்த்தத்தில் உள்ள விவேகம். பக்தி,

ஞானம்,கர்மம், யோக மார்கம், துக்கம், கஷ்டம், நிராசை யடைந்த மக்களின் மன நிலையின் வர்ணனை, தெய்வ வந்தனை/நிந்தனை போன்றவையாகும். பாஹ்ய ஸ்வரூபம் என்பது ஸ்ரீ ராமனிடம் பக்தியின் வெளிப்பாட்டால் கருணை வேண்டி இயற்றப்பட்டவையாகும்.

கருணா ஸ்தோத்திரத்தில் சமர்த்தர் ஸ்ரீராமனிடம் ஏன் வேண்டிக்கொள்ள வேண்டும்? ஏனென்றால் சமர்த்தரின் ஆராதனை தெய்வமாக ராமர் விளங்குகிறார். ராமனிடம் அத்யந்த பக்தி கொண்டுள்ளார். சமர்த்தர் தன்னை ஸ்ரீராமனின் தாஸன் என்று கூறிக்கொள்வதில் பெருமைப் படுகிறார். ராமனிடத்தில் தாஸ்ய பாவத்துடன் இருப்பதையே விரும்புகிறார். அதனால்தான் சமர்த்தர் ஒரு சமயம் ஆஞ்சநேயர் கோவிலில் த்யானத்தில் இருக்கும்போது ஸ்ரீராமரே அவருக்கு மந்திர உபதேசம் செய்தார். ஆகவே ஸ்ரீராமரே சமர்த்தரின் குரு ஆவார்.

ஸ்ரீ சமர்த்த ராமதாஸர் இவ்வாறாக கூறுகிறார்.

**மணோனி ஆம்ஹீ ராமதாஸ । ஸ்ரீராம சரணி ஆமுசா விஸ்வாஸ ।**
**கோஸலோனிபடோ ஹே ஆகாஸ । ஆணி காசி வாஸ ந பாஹு ।**

ஸ்ரீ ராமனிடம் நான் த்ருட விச்வாஸமுள்ளவனாக உள்ளேன். என்மீது ஆகாயமே இடிந்து மேலே விழுந்தாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளப்போவதில்லை. நான் யாரிடமும் உதவி கோரி செல்ல மாட்டேன். ரகுநாதன் ஒருவரைத் தவிர நான் வேறு எவரிடமும் வேண்டிக் கொள்ளப் போவதில்லை. என்று கூறுகிறார்.

இவ்வாறாக ஸ்ரீ சமர்த்த ராமதாஸரால் இயற்றப்பட்ட 81 படைப்புகளில் ஸ்ரீ சமர்த்தரின் ஆத்ம சரிதம் என்ற தலைப்பில் முறையாக ஐந்து கருணா ஸ்தோத்திரங்களும்,

1. ஸமர்தானா படலேலே கோடே
(ரகுநாயகா காய கைஸே கராவே)
2. உதாஸீன ஹா காள கோடே ந கண்டே
3. துஜவீண ராமா மஜ கண்ட வேனா
4. அனுதின அனு தாபே தாபலோ ராம ராயா
5. புத்தி தே ரகு நாயகா

ஸ்ரீ சமர்த்தரின் மனநிலை என்ற தலைப்பிலிருந்து முறையாக மூன்று கருணா ஸ்தோத்திரங்களுடன்-

14. ரகு நாயகா மாகணே ஹேசி ஆதா
17. துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸி ஆலோ
19. ராமா வர பார

இந்த எட்டு ஸ்தோத்திர படைப்புகளும் ஸ்ரீ சமர்த்த ஸம்பிரதாய மடங்களிலும், உபாஸனா கேந்திரங்களிலும் முறையாக பாராயணம் செய்து வருகின்றனர். அதன் பொருட்டு இங்கு கருணா ஸ்தோத்திரங்கள் முறையாகத் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளது. அதில் கடின சப்த அர்த்தங்களுடன் தெளிவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்ரீசமர்த்த அன்பர்கள் இந்த கருணா ஸ்தோத்திரங்களை பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்து எல்லாம் வல்ல ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் கருணைக்கும் ஸ்ரீ சமர்த்தரின் அருளுக்கும் பாத்திரர்களாக வேண்டுமென்பதே அடியேனின் பிரார்த்தனை.

|| ஜெய ரகுவீர ||

ஸ்ரீ:

# ஸ்ரீ சமர்த்த ராமதாஸரின் சரித்திர சுருக்கம்

மஹாராஷ்டிர தேசம் 'ஜாம்ப' க்ஷேத்திரத்தில் வாழ்ந்த சூர்யாஜிபந்த் ராணுபாய் தம்பதிகளுக்கு (கி.பி. 1608) பிறந்தவர் ஸ்ரீ சமர்த்த ராமதாஸர் ஆவார். சிறு வயதில் தன் வாழ்நாட்களை இறை வழிபாட்டிலேயே ஈடுபடுத்திக் கொண்டார். இவர் ஸ்ரீ ராமரின் தீவிர பக்தராக விளங்கினார்.

பாகவதம், இராமாயணம், புராணம் படிப்பதிலும், ஹரிகதை, பஜனை, ஹரி நாம சங்கீர்த்தனம் செய்வதிலும் அதீத பக்தி கொண்டவராகத் திகழ்ந்தார். ஸ்ரீ ராமநாம மகிமையை அறிந்த இவருக்கு ஸ்ரீ ஆஞ்சநேயரின் அருளால் ஸ்ரீ ராமசந்திர பிரபுவின் தரிசனம் கிடைக்கப் பெற்று ஸ்ரீ ராமரே அனுக்ரஹம் செய்து நாம ஜபம் செய்வதற்கு துளசி மாலையும், காவி உடையும் அளித்து திரயோதசாக்ஷர மந்திரம் உபதேசித்து உலக மக்களின் நலனுக்காக இந்து தர்மத்தை நிலைநாட்டச் செய்ய வேண்டியது உனது கடமையாகும் எனக் கட்டளையிட்டு ஸ்ரீராமதாஸ் என்கிற தீக்ஷாநாமம் கொடுத்து ஸ்ரீராமசந்திர பிரபு அந்தர்தியானம் அடைந்தார்.

கல்யாண கோலத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீ ராமதாஸர் மேற்கூறிய ஸ்ரீ ராமச்சந்திர பிரபுவின் கட்டளையை நிறைவேற்றும் எண்ணத்தில், தன் கல்யாண கோலத்திற்கு விடை கொடுத்து நாசிக் நகரத்தில் உள்ள கோதாவரி - நந்தினி நதி சங்கமிக்கும் டாகளி என்னும் இடத்தில் 13 கோடி ஸ்ரீ ராம நாம ஜபம் மேற்கொண்டும் அவ்வாறே

காயத்ரி ஜபம் மேற்கொண்டும் தொடர்ந்து 12 வருடங்கள் விடாமல் ஸ்ரீ ராமநாம ஜபத்தில் ஈடுபட்டு மறுபடியும் ஸ்ரீராமரின் தரிசனம் கிடைக்கப்பெற்றார்.

ஸ்ரீ ராமதாஸர் மஹாராஷ்டிர தேசத்தில் உள்ள புனித ஸ்தலங்களில் யாத்திரை மேற்கொண்டும் இந்து தர்மத்தை நிலைநாட்டிட ஹிமாலயம் முதல் சேதுக்கரை வரையிலும் அநேக வழிபாட்டு தலங்களில் மடத்தை நிறுவியும் அநேக சிஷ்ய சமுதாயத்தினரை ஏற்படுத்தி ஸ்ரீராமநாம பக்தி பிரசாரம் செய்வதையே தனது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்.

மஹாராஷ்டிராவில் சாபல் என்னும் இடத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திக்கு அற்புதமான கோவிலை நிர்மாணித்து ஊர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஸ்ரீ ராமநவமி மகோற்சவப் பெருவிழாவுடன் ரதோற்சவம் நடைபெறுவதற்கு வழி நடத்தினார். அவ்வாறே ஸ்ரீராமநாம பக்தி பிரச்சாரத்தை நிலைநாட்டு வதற்கு ஸ்ரீராமனின் தாஸனாகிய ஸ்ரீஆஞ்சநேயருக்கு செந்தூரம் சாத்திய ரூபத்தில் 11 இடங்களில் கோயில்களை ஸ்தாபனம் செய்தார்.

ராமேஸ்வரம் யாத்திரை செல்லும் நிமித்தம் சத்ரபதி சிவாஜியின் சகோதரரான ஏகோஜி என்று அழைக்கப்படும் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் வெங்கோஜிக்கு அனுக்ரஹம் செய்வதற்கு தஞ்சை வந்தார். அப்போது தஞ்சாவூர், மன்னார்குடி, கோனூர் ஆகிய இடங்களில் ஸ்ரீ சமர்த்த சம்பிரதாய மடங்களை ஸ்ரீராமநாம பக்தி பிரசாரம் செய்வதையே நோக்கமாகக் கொண்டு ஸ்தாபனம் செய்தார். அந்நாட்களிலிருந்து தஞ்சாவூரில் அவர்

சம்பிரதாயமாக நிர்மாணம் செய்த மடங்கள் அனைத்தும் ஸ்ரீராமநாம பக்திப் பிரசாரம் வம்ச பாரம்பர்ய க்ரமமாகச் செய்து வருகின்றனர்.

ஸ்ரீ சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகள் மஹாராஷ்டிர மொழியில் இயற்றிய நூல்கள் ஸ்ரீமத் தாஸபோதம், மனாசே ஸ்லோகம், ஆத்மாராம், பீமரூபி ஸ்தோத்திரம், கருணாஷ்டகம் மற்றும் பல ஸ்தோத்திரங்கள், பதங்கள், அபங்கங்கள் ஆகும்.

மஹாராஷ்டிர தேசத்தில் சதாரா மாவட்டத்தில் சஜ்ஜன்கட் என்ற மலைக்குன்றில் கி.பி. 1681 ஆம் வருடம் அவருடைய 72 ஆம் வயதில் மாக மாதம் கிருஷ்ணபட்ச நவமி அன்று அநேக சிஷ்ய சமுதாயத்தினர் ஒன்று சேர "ஸ்ரீராம ஜெயராம ஜெய ஜெய ராம" என்று நாம கோஷம் முழங்க அவருடைய பூத உடலைத் துறந்தார். அதே இடத்தில் அவருடைய அந்திம ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு சமாதி அமைத்து, இதுநாள் வரையில் மிகவும் சிறந்த முறையில் பூஜை ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

**சுபமஸ்து**

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| 1. அனுதின அனுதாபே | 1 |
| 2. துஜாதாஸ மீவ்யர்த்த ஜன்மாஸ ஆலோ | 14 |
| 3. ஶ்ரீராமாவர பார | 21 |
| 4. ரகுநாயகா மாகணே ஹேசீ ஆதா | 26 |
| 5. புத்தி தே ரகுநாயகா | 34 |
| 6. உதாஸீன ஹா காள கோடே ந கண்டே | 45 |
| 7. ரகுநாயகா காய கைஸே கராவே | 53 |
| 8. துஜவீண ராமா மஜ கண்டவேளா | 57 |
| 9. ஶ்ரீ ராமாசே உபகார | 65 |
| 10. ஸர்வோத்தமா கை மஜ பேடீ தேஸீ | 69 |
| 11. ஶ்ரீ ஸமர்த்தாஞ்சி இச்சா | 72 |
| 12. ஶ்ரீ ஸமர்த்தாஞீ கேலேலீ ஶ்ரீராமாசீ ப்ரார்த்தனா | 76 |
| 13. உபஸம்ஹார | 77 |

श्रीसमर्थरामदास स्वामी कृत

# ।। करुणाष्टक स्तोत्रे ।।

# கருணாஷ்டக ஸ்தோத்ரே

## 1.अनुदिन अनुतापें

## 1. அனுதின அனுதாபே

अनुदिन अनुतापें तापलों रामराया ।
परमदिनदयाळा नीरसी मोहमाया ।
अचपळ मन माझें नावरे आवरीतां ।
तुजविण सिण होतो धांवरे धांव आतां ।।१।।

*அனுதின அனுதாபே தாபலோ ராம ராயா ।*
*பரமதின தயாளா நீரஸீ மோஹமாயா ।*
*அசபள மனமாஜே நாவரே ஆவரீதா ।*
*துஜவிண ஸிண ஹோதோ தாவரே தாவ ஆதா । 1*

***அனுதின*** - ஒவ்வொரு நாளும், தினப்பொழுதும். ***அனுதாப*** -பச்சாதாபம், துக்கமடைதல். ***நீரஸீ*** - நாசம் செய்தல். ***அசபள*** - சஞ்சலம். ***ஸிண*** - ஏங்குதல், தளர்ந்து போதல்.

ரகுநாயகனே ! ஒவ்வொரு நாளும் நான் பச்சாதாபத்தினால் மனம் வருந்தியுள்ளேன். பிரபஞ்சத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு இன்னல்களினால் களைப்படைந்துள்ளேன். தீனதயாளனாகிய உன்னிடத்தில்

வினவுகிறேன். இந்த பிரபஞ்சத்தில் உள்ள மோக மாயையிலிருந்து என்னை விடுவித்து அதனால் ஏற்படும் சஞ்சலமான புத்தியை விலக்கிவிடு. உன்னுடைய தரிசனத்திற்காக எனது மனம் ஏங்குகிறது. ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். தயாளனே ! ஓடி வருவாயாக.

भजनरहित रामा सर्वही जन्म गेला ।
स्वजन जन धनाचा व्यर्थ म्यां स्वार्थ केला ।।
रघुपति मति माझी आपुलीशी करावी ।
सकळ त्यजुनि भावें कास तूझी धरावी ।।२।।

*பஜன ரஹித ராமா ஸர்வஹீ ஜன்ம கேலா ।*
*ஸ்வஜன ஜனதனாசா வ்யர்த்த் ம்யா ஸ்வார்த்த கேலா ॥*
*ரகுபதி மதிமாஜீ ஆபுலீஸீ கராவீ ।*
*ஸகள த்யஜுனி பாவே காஸ தூஜீ தராவீ ॥ 2*

**மதி - புத்தி. காஸ - துணைபுரிதல், ஆதரவு அளித்தல்.**

ராமா ! உன்னை துதிக்காமல், உன் நாமத்தை பஜிக்காமல் என்னுடைய வாழ்நாள் முழுவதும் வீணடித்துவிட்டேன் எனது சுயபுத்தியின் காரணமாக சொந்தபந்தங்களினால் கிடைக்கக்கூடிய த்ரவ்யம், தனம் ஆகியவற்றில் பற்றுகொண்டு வாழ்ந்து வந்தேன். இந்த அறியாமையை எண்ணி மனம் வருந்துகிறேன். இருப்பினும் என்னுடைய அறியாமையை மன்னித்தருளி உன்னுடைய ஆதரவினால் எல்லாவிதமான நற்குணங்களை அளித்து அருள் செய்வாயாக.

विषयजनित सूखें सौख्य होणार नाहीं ।
तुजविण रघुनाथा वोखटें सर्व कांहीं ।।
रविकुळ टिळकारे हीत माझें करावें ।
दुरित दुरि हरावें सस्वरूपीं भरावें ।।३।।

*விஷய ஜனித ஸுகே ஸௌக்ய ஹோணார நாஹீ ।*
*துஜவிண ரகுநாதா வோகடே ஸர்வ காஹீ ॥*
*ரவிகுல டிலகாரே ஹீத மாஜே கராவே ।*
*துரித துரி ஹராவே ஸஸ்வரூபீ பராவே ॥ 3*

**விஷய ஜனித** - எதிர்நோக்கும் எண்ணம். **வோகடே** - துக்கமடைதல். **ரவிகுல டிலக** - சூரிய குலத்தில் அவதரித்த உத்தம புருஷன் - ராமன். **துரித** - பாபம். **துரி** - வெகு தொலைவில். **ஹராவே** - இல்லாமல் செய்துவிடு.

என்னுடைய பிறப்பினால் கிடைக்கக்கூடிய சொந்தங்கள், பொருள் மற்றும் தனம் இவை யாவும் நிலலையானதல்ல. உன் அருளைவிட எனது பிறப்பானது நிலையற்றது. ரவிகுலதிலகனே ! நீ என்னை அருள் செய்து, பிறப்பினால் கிடைக்கக்கூடிய பாவங்களில் ஏற்படும் துக்கங்கள் யாவையும் இல்லாமல் செய்து என்னை காத்தருள்வாயாக.

तनु मनु धनु माझें राघवा रूप तूझें ।
तुजविण मज वाटे सर्व संसार वोझें ।।
प्रचलित न करावी सर्वथा बुद्धि माझी ।
अचळ भजन लीला लागली आस तूझी ।।४।।

தனு மனு தனு மாஜே ராகவா ரூப தூஜே ।
துஜவிண மஜ வாடே ஸர்வ ஸம்ஸார வோஜே ॥
ப்ரசலித ந கராவீ ஸர்வதா புத்தி மாஜீ ।
அசள பஜன லீலா லாகலீ ஆஸ தூஜீ ॥ 4

**ப்ரசலித** - ஸ்திரமில்லாத. **அசள பஜன லீலா** - ஸ்திரமான பக்தியுடன் பஜனை செய்தல், பூஜை செய்தல்.

ராகவனே ! உடலாலும், மனதாலும் மற்றும் பொருளாலும் நான் உன்னிடத்தில் ஐக்கியம் அடைந்துள்ளேன். ஆகையால் உன்னை தவிர்த்து இந்த பிரபஞ்சத்தில் வாழ்வதையே பாரமாக கருதுகிறேன். ராமா ! நீ என்னுடைய புத்தியை நிலையற்றதாகிவிடாதே, காரணம் உன்னிடத்தில் நிலையான பக்தியுடன் பூஜை, பஜனை, சேவை செய்வதையே என்னுடைய விருப்பமாகக் கொண்டுள்ளேன்.

चपलपण मनाचें मोडितां मोड वेना ।
सकळ स्वजन माया तोडितां तोड वेना ।।
घडि घडि विघडे हा निश्चयो अंतरीचा ।
म्हणउनि करुणा हे बोलतों दीनवाचा ।।५।।

சபள பண மனாசே மோடிதா மோட வேனா ।
ஸகல ஸ்வஜன மாயா தோடிதா தோட வேனா ॥
கடி கடி விகடே ஹா நிச்சயோ அந்தரீசா ।
மண உனி கருணா ஹே போலதோ தீனவாசா ॥ 5

**ஸ்வஜனமாயா** - என்னுடைய சஞ்சலமான மனதை. **கடி கடி** - ஒவ்வொரு நொடிப்பொழுதும். **விகடே** - உடைதல்.

ராமா ! நான் உன்னிடத்தில் மிகவும் பணிவுடன் கூறுகின்றேன். என்னுடைய சஞ்சலமான மனதை தூக்கி எறிய வேண்டும் என்று நினைத்தாலும் முடியவில்லை. சொந்த பந்தம் என்ற மோக மாயையிலிருந்து விடுட வேண்டும் என்றாலும் முடியவில்லை. மனதில் நினைப்பவை யாவும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உடைத்தெறிய வேண்டும் என மனம் நினைக்கின்றது. எனவே, நீ என் மீது கருணை புரிவாயாக.

जळत हृदय माझें जन्म कोटयानुकोटी ।
मजवरी करुणेचा राघवा पूर लोटीं ।।
तळमळ निववी रे राम कारुण्यसिंधु ।
षड्रिपु कुल माझे तोडि याचा समंधु ।।६।।

ஜளத ஹ்ருதய மாஜே ஜன்ம கோட்யானு கோடீ ।
மஜவரி கருணேசா ராகவா பூர லோடீ ॥
தளமள நிவவீ ரே ராம காருண்ய ஸிந்து ।
ஷட்ரிபு குல மாஜே தோடி யாசா சமந்து ।। 6

**கோட்யான கோடி** - கணக்கிலடங்காத. **நிவவீ** - சாந்தம் செய்தல், திருப்தி செய்தல்.

ராமா ! கணக்கிலடங்கா பிறப்பு இறப்பும் கூடிய இந்த பிறவியில் தவித்துக்கொண்டிருக்கும் எனது மனமானது ஜ்வாலையாக எரிந்து கொண்டிருக்கிறது. நான் இப்பிறவியில், காமம், க்ரோதம், லோபம், மதமாச்சர்யம், மோகம் போன்ற ஆறு விகாரங்களால் சூழ்ந்து கொண்டிருக்கிறேன். இந்த நிலையிலிருந்து விடுபட்டு பரமார்த்த நிலைக்கு மாற முடியவில்லை. மேற்கண்ட ஆறு விகாரங்களிலிருந்து என்னை

காத்தருள்வாயாக. உன்னுடைய தரிசனம் கிடைக்க நாளொரு பொழுதுமாய் காத்துக்கொண்டிருக்கிறேன். என் மனதை சாந்தமடையச் செய்வாயாக.

तुजविण करुणा हे कोण जाणेल माझी ।
सिणत सिणत पोटीं पाहिली वाट तूझी ।।
झडकरि झड घालीं धांव पंचानना रे ।
तुजविण मज नेते जंबुकी वासना रे ।।७।।

*துஜவிண கருணா ஹே கோண ஜாணேல மாஜீ ।*
*சிணத சிணத போடீ பாஹிலீ வாட தூஜீ ॥*
*ஜட கரீ ஜடகாலீ தாவ பஞ்சானனா ரே ।*
*துஜவிண மஜ நேதே ஜம்புகீ வாஸனா ரே ॥* **7**

**சிணத சிணத** - மனம் வருந்தி துயரத்துடன். **வாஸ** - எதிர்பார்த்தல். **பஞ்சானன** - சிங்கம், சங்கரன். **ஜம்புகீ** - நரி.

சமர்த்த ராமதாசர் கூறுகிறார். நான் உன்னிடம் மனம் வருந்திக் கூறுகிறேன். என்னுடைய தவிப்பு உன்னைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். நீ வந்து என்னை காத்தருள்வாயென நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனது மனநிலை எவ்வாறு உள்ளது தெரியுமா ? சிங்கத்திடம் மாட்டிக்கொண்ட நரி போன்று உள்ளது. நான் உன்னிடத்தில் சரணாகதியடைவது தவிர, முக்தியடைவதற்கு வேறு மார்க்கம் இல்லை.

सबळ जनक माझा राम लावण्य पेटी ।
म्हणउनि मज पोटीं लागली आस मोठी ।।
दिवस गणित बोटीं प्राण ठेवूनि कंठीं ।
अवचट मज भेटी होत घालीन मीठी । ।।८।।

*ஸபள ஜனக மாஜா ராம லாவண்ய பேடீ ।*
*மணஉனி மஜ போடீ லாகலீ ஆஸ மோடீ ॥*
*திவஸ கணித போடீ ப்ராண டேவூனி கண்டீ ।*
*அவசட மஜ பேடீ ஹோத காலீன மீடீ ॥ 8*

**ஸபள** - சாமர்த்தியமானவன். **ஜனக** - தந்தை. **லாவண்ய பேடீ** - அழகிய பொக்கிஷம். **கணித** - எண்ணிக்கை. **அவசட** - திடீரென்று.

*சமர்த்த ராமதாசர் கூறுகிறார் எனது தந்தையாகிய ராமன் சாமர்த்தியமாணவன். அழகின் பொக்கிஷம். அவனுடைய தரிசனம் எப்பொழுது கிடைக்கும் என்று நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றேன். அவ்வாறு, திடீரென்று ஒரு நாள் ராமனின் தரிசனம் கிடைத்தால் ஆனந்தத்தில் அவனை மார்போடு அனைத்துக் கொள்வேன். (இந்த ஸ்லோகத்தில் ராமனின் சகுண, சாக்ஷாத்காரத்தினால் அவனுடைய பக்தி பாவத்தினை அறிந்து கொள்ளலாம்)*

जननि जनक माया लेंकरू काय जाणे ।
पय न लगत मूखें हाणतां वत्स नेणे ।।
जळधर कण आशा लागली चातकासी ।
हिमकर अवलोकी पक्षिया भूमिद्वासी ।।९।।

ஜனனி ஜனக மாயா லேகரு காய ஜாணே
பய ந லகத மூகே ஹாணதா வத்ஸ நேணே ॥
ஜலதர கண ஆசா லாகலீ சாதகாஸீ ।
ஹிமகர அவலோகீ பக்ஷியா பூமி வாஸீ ॥ 9

**பய** - பால். **வத்ஸ** - கன்றுக்குட்டி. **ஜளதர** - கார்மேகம். **ஹிமகர** - சந்திரன், நிலவு.

பெற்றோர்களின் அன்பு, பாசம் குழந்தைகளுக்கு எவ்வாறு புரியும் ? கன்றுக்குட்டி தன் தாய்ப்பசுவிடம் (தனது பசியை போக்குவதற்கு) சென்று மடியில் பால் நுகரும் போது காலால் உதைத்துவிடும் இருப்பினும், அன்பினால் கன்று தாய்ப்பசுவிடம் செல்கின்றது. அவ்வாறு இறைவனிடம் பக்தி செலுத்தும்போது எவ்வளவு இன்னல்கள், சங்கடங்கள் ஏற்பட்டாலும் இறைவனிடமிருந்து விலகி செல்லுதல் கூடாது. மறுபடியும் இறைவனிடத்தில் ஆழ்ந்த பக்தி செலுத்துதல் அவசியமாகும். அதற்காக மிகவும் கடினமாக ப்ரயத்தினம் செய்தல் அவசியமாகும். அது எவ்வாறென்றால், சாதகப் பறவை எப்பொழுது கார்மேகம் வரும் என்று எதிர்பார்க்கின்றதோ, சகோர பறவை நிலவின் கிரணங்கள் எப்பொழுது தோன்றும் என்று எதிர்பார்க்கின்றதோ, அவ்வாறு இறைவனின் தரிசனத்திற்கு ஆழ்ந்த பக்தியின் மூலமாக அடைதலே சிறந்த வழியாகும்.

तुजविण मज तैसें जाहलें देवराया ।
विलग विषमकाळीं तूटली सर्व माया ।।
सकळ जन सखा तूं स्वामी आणीक नाहीं ।
विषय वमन जैसें त्यागिलें सर्व कांहीं ।।१०।।

துஜவிண மஜ தைஸே ஜாஹலே தேவராயா |
விலக விஷமகாளீ தூடலீ ஸர்வ மாயா ||
ஸகல ஜன ஸகா தூ ஸ்வாமி ஆணிக நாஹீ |
விஷய வமன ஜைஸே த்யாகிலே ஸர்வ காஹீ || *10*

**விலக** - உபாதை. **விஷமகாளீ** - கடின காலம், சங்கடமான நேரம். **வமன** - வாந்தி.

தேவராயனே ! எனக்கு ஏற்படும் உபாதைகள், சங்கடங்கள் யாவும் நிவர்த்தி செய்ய உன்னைத் தவிர வேறு யாரும் கிடையாது. நான் மோகம், மாயை, ஆசை இவற்றிலிருந்து முற்றிலும் விலகி உள்ளேன். தற்போது நீ தான் எனக்கு எல்லாம். தாய், தந்தை, சொந்தபந்தம், நண்பன், சகோதரன் ஆவாய். நான் இந்த ப்ரபஞ்சத்திலிருந்தும் முற்றிலும் எல்லா தோஷங்களி லிருந்தும் விடுபடுவதற்கு, வமனம் (வாந்தி) எவ்வாறு எடுப்பார்களோ, அவ்வாறு இவை யாவும் தியாகம் செய்ய உள்ளேன்.

स्वजन जन धनाचा कोण संतोष आहे ।
रघुपतिविण आतां चित्त कोठें न राहे ।
जिवलग जिव घेती प्रेत सांडूनी जाती ।
विषय सकळ नेती मागुता जन्म देती ||११||

ஸ்வஜன ஜனதனாசா கோண சந்தோஷ ஆஹே |
ரகுபதி விணஆதா சித்த கோடே ந ராஹே ||
ஜிவலக ஜிவ கேதீ ப்ரேத ஸாண்டுனி ஜாதீ |
விஷய ஸகல நேதீ மாகுதா ஜன்ம தேதீ || **11**

**ஸாண்டுனி**- விட்டெரிதல். **நேதீ** - இல்லை யென்றால்.

உறவினர்கள், சுற்றத்தார்கள், நண்பர்கள் யாவரும், என்னை பரமார்த்த மார்க்கத்திலிருந்து திசை திருப்பி விடுவார்கள். மற்றும் ப்ரபஞ்சத்தில் உள்ள மோக மாயையில் விழ வழி நடத்துவார்கள். ஆகையினால், அவர்கள் மீது எனக்கு அன்பு ஏற்படுவதில்லை. அவர்களுடைய சுயமரியாதைக்காக என் உயிரை எடுத்து உடலைத் தூக்கி விட்டெறிந்து விடுவார்கள். எனவே, ராமா! உன்னைத் தவிர வேறு எந்த சிந்தனையும்! எனக்கில்லை. ஆகையினால் எனக்கு அடைக்கலம் கொடுத்து காத்தருள்வாயாக. இல்லையென்றால் நான் மறுபடியும் பிறப்பு, இறப்பு ஏற்படக்கூடிய சுழற்சியில் சிக்கி தவிப்பேன்.

सकळ जन भवाचे आखिले वैभवाचे ।
जिवलग मग कैचें चालतें हेंचि साचें ।
विलग विषमकाळीं सांडिती सर्व माळी ।
रघुविर सुखदाता सोडवी अंतकाळी ।।१२।।

ஸகள ஜன பவாசே ஆகிலே வைபவாசே ।
ஜிவலக மக கைசே சாலதே ஹேசி ஸாசே ॥
விலக விஷமகாளீ ஸாண்டிதீ ஸர்வ மாளீ ।
ரகுவிர ஸுகதாதா ஸோடவீ அந்த காளீ ॥ 12

**ஆகிலே** - ஆதாரம். **கைசே** - என்ன ? **ஸாசே** - உண்மை, சத்தியம்.

மக்கள் யாவரும் சுகம் எங்கு கிடைக்கிறதோ அங்கு நாடிச்செல்கிறார்கள். சுகம் மட்டும்தான் ஜீவனத்திற்கு ஆதாரம் என்று கருதுகிறார்கள். எனக்கு ஒரு சங்கடம் மற்றும் துயரம் நேர்ந்தாலென்ன ? எல்லோரும் என்னை விட்டு விலகிச் செல்கிறார்கள் ! இது உண்மை. அப்பொழுதும் எனக்கு ஸ்ரீ ராமனைத்தவிர வேறு யாரும் கிடையாது. அவன்தான் சுகம் கொடுப்பவனும், அந்திம காலத்தில் இந்த பவ சாகரத்திலிருந்து விடுதலை கொடுத்து உதவுபவனும் என்னுடைய ராகவனே ஆவான்.

सुख सुख म्हणतां हे दुःख ठाकूनि आलें ।
भजन सकळ गेलें चित्त दुश्चित्त जालें ।
भ्रमित मन वळेना हीत तें आकळेना ।
परम कठिण देहीं देहबुद्धी गळेना ।।१३।।

ஸுக ஸுக மணதா ஹே துக்க டாகூனீ ஆலே ।
பஜன ஸகள கேலே சித்த துச்சீத ஜாளே ॥
ப்ரமித மன வளேனா ஹீத தே ஆகளேனா ।
பரம கடின தேஹீ தேஹபுத்தி களேனா ॥ 13

துச்சித - துக்கம், விரக்தி, துயரம்.

சுகம், சுகம் என்று கூறும்போதே அங்கு துன்பமே ஏற்படுகிறது. உன்னைத் துதிக்காமல் அல்லது பஜனை செய்யாமல் சென்றவர்கள் யாவரும் துக்கத்துடனும், துயரத்துடனும் காணப்பட்டனர். என் மனம் சோர்வடைந்துள்ளது. விரக்தியடைந்துள்ளேன். நல்லவை மற்றும் தீயவை அறிய முடியவில்லை . பாவ- புண்ணியம் அறிய முடியவில்லை. 84 லட்சம் யோனியில் சுழற்சி செய்து இந்த மானுட பிறப்பு கிடைத்துள்ளது. இந்த

தேகத்தை நற்செயலில் ஈடுபடுத்தி இறைவனிடத்தில் சரணாகதி அடையவேண்டும் என்று யாருக்கும் தோன்றுவதில்லை.

उपरति मज रामीं जाहली पूर्णकामीं ।
सकळ भ्रम विरामीं राम विश्राम धामीं ।।
घडिघडि मन आतां रामरूपी भरावें ।
रविकुळ टिळकारे आपुले सें करावें ।।१४।।

உபரதி மஜ ராமி ஜாஹளீ பூர்ண காமீ ।
ஸகள ப்ரம விராமீ ராம விஸ்ராம தாமீ ॥
கடி கடி மன ஆதா ராமரூபீ பராவே ।
ரவிகுல டிலகாரே ஆபுலே ஸே கராவே ॥ **14**

**உபரதி** - விரக்தி, வைராக்யம், விஷயத்திலிருந்து விலகி செல்லுதல். **பூர்ணகாமி** - திருப்தியடைதல், சந்தோஷமடைதல். **சகள ப்ரம விராமீ** - ப்ரமம் இல்லாதவன், சூன்யமானவன்.

ஹே ராமா ! நான் தற்போது, விரக்தி, வைராக்கியம், இவற்றிலிருந்து முழுமையாக விடுபட்டுள்ளேன். ஆகையினால் மன மகிழ்ச்சியோடு உள்ளேன். மன திருப்தி அடைந்து, மாயையினால் ஏற்பட்ட பல்வேறு இன்னல்களிலிருந்து நான் விலகியுள்ளேன். தற்போது என்னுடைய மனம் உன்னுடைய முழுச் சொரூபமாகவே நிறைந்துள்ளது. காரணம், என்னுடைய மன அமைதியே நீ தான். ஹே ரகுகுல திலகனே ! நீ என்னை உன்னுடையவனாக ஆக்கிக்கொள். உன்னுடைய சொரூபத்தில் என்னை ஐக்கியமாக்கு.

जळचर जळवासी नेणती त्या जळासी ।
निशिदिन तुजपासी चूकलों गूणरासी ।।
भुमिधर निगमासी वर्ण वेना जयासी ।
सकल भुवन वासी भेटी दे **रामदासीं** ।।१५।।

*ஜலசர ஜலவாஸீ நேணதீ த்யா ஜலாஸீ।*
*நிஸி தின துஜபாஸீ சூகலோ குணராசீ ॥*
*புமிதர நிகமாஸீ வர்ண வேனா ஜயாஸீ ।*
*ஸகல புவன வாஸீ பேடீ தே **ராமதாஸீ** ॥ 15*

**நேணதீ** - அக்ஞானம். **புமிதர நிகம**-நாகம் மற்றும் வேதம்.

நீர்நிலையில் வசிக்கும் உயிரினங்கள் நீரின் தன்மையில் எவ்வாறு அக்ஞானமாக இருக்கின்றதோ, அதாவது எல்லாவற்றிற்கும் மேலாக ஆதாரமான நீரிலே வாழ்கிறோம் என்ற எண்ணம்/அஹங்காரம் இல்லாமல் வாழ்கின்றதோ அவ்வாறே எல்லா நற்குணங்களைக் கொண்ட உன்னை நினைக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. காரணம் அக்ஞானத்தினால் உன்னுடைய உண்மையான சொரூபம் எனக்குத் தெரியவில்லை. எவ்வாறு ஆயிரம் தலைகொண்ட நாகத்தினாலும் மற்றும் வேதங் களினாலும் உன்னுடைய சொரூபத்தை வர்ணிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில், அக்ஞானியாகிய என்னுடைய நிலை, உனக்கு எவ்வாறு புலப்படும். எல்லாம் நிறைந்தவனே என்னை ஆட்கொள்வாயாக. அதுதான் எனது முக்தி, அதுதான் எனது ஆனந்தம்.

## २. ।। तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।

### 2. துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ

असंख्यात रे भक्त होऊनि गेले ।
तिहीं साधनांचे बहु कष्ट केले ।
नव्हे कार्यकर्ता भूमीभार जालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।१।।

*அஸங்க்யாத ரே பக்த ஹோ ஊனி கேலே ।*
*திஹீ சாதனாசே பஹு கஷ்ட கேலே ॥*
*நவ்ஹே கார்ய கர்தா பூமீ பார ஜாலோ ।*
*துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 1*

**அஸங்க்யாத** - கணக்கிலடங்காத.

ஏ ராமா ! இப்பூவுலகில் உன்னுடைய பக்தர்களாக எவ்வளவோ பேர் கணக்கிலடங்கா தோன்றியுள்ளனர். உன்னை அடைவதற்காக எவ்வளோ கஷ்டப்பட்டு உள்ளார்கள். ஆனால் நான் மட்டும் ஒன்றுமே கடைப்பிடிக்கவில்லை. அதனால் இப்பூவுலகிற்கு நான் பாரமாக இருக்கிறேன். நான் உன்னுடைய தாஸன் என்று கூறிக்கொண்டாலும் எனது ஜன்மம் வீணானது.

बहूदास ते तापसी तीर्थवासी ।
गिरीकंदरी भेटी नाहीं जनांसी ।।
स्थिती ऐकतां थोर विस्मीत जालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।२।।

*பஹூதாஸ தே தாபஸீ தீர்த்தவாஸீ ।*
*கிரிகந்தரி பேடி நாஹீ ஜனாஸீ ॥*
*ஸ்திதி ஐகதா தோர விஸ்மீத ஜாலோ ।*
*துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 2*

**தாபஸீ**- தபங்கள் . **கிரிகந்தரி** - மலையில் உள்ள சக்தி. **விஸ்மீத** - ஆச்சர்யத்துடன்.

ஏ ராமா ! உன்னுடைய பக்தர்கள் பலபேர் தீர்த்த க்ஷேத்திரங்களிலும், மலைக்குகைகளிலும் தங்கி ஜப, தபங்கள் செய்து தனிமையில் இருந்துள்ளனர். யாரொருவரையும் அவர்கள் சந்திக்க விரும்பவில்லை. அவர்களுடைய இந்த செயல்கள் யாவும் எனக்கு மிகவும் ஆச்சர்யப்படும்படி இருந்தது. உன்னை அடைவதற்காக அவர்கள் யாவரும் இந்த கடுமையான சாதனைகளைப் புரிந்துள்ளனர். நான் மட்டும் ஒன்றுமே செய்வதில்லை , ஆகையால் நான் இந்த ஜன்மம் எடுத்தும் வீணாகக் கழிக்கின்றேன்.

सदा प्रेमरासी तया भेटलासी ।
तुझ्या दर्शने स्पर्शने सौख्यराशी ।।
अहंतामनी शब्द ज्ञानें बुडालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।३।।

*ஸதா ப்ரேமராஸீ தயா பேட லாஸீ ।*
*துஜ்யா தர்ஸனே ஸ்பர்ஸனே ஸௌக்ய ராஸீ ॥*
*அஹந்தாமனி சப்த ஞானே புடாலோ ।*
*துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 3*

எந்த ஒரு பக்தனுக்கு உன்னிடத்தில் அளவிற்கு அதிகமாக அன்பு உள்ளதோ எவரொருவர் உனக்கு

எல்லாவற்றையும் அர்ப்பணிக்கின்றார்களோ, உன்னிடத்தில் ஒன்றோடு கலந்துள்ளார்களோ, அவர்களுக்கு நீ தரிசனம் கொடுக்கிறாய், அருள் புரிகிறாய். உன்னுடைய தரிசனத்தினாலும் ஸ்பரிசத்தினாலும் அவர்கள் யாவரும் நற்கதி அடைந்துள்ளார்கள். நான் மட்டும் இந்த செயலுக்கு அப்பாற்பட்டவனாய் இருக்கிறேன். காரணம் நான் அகந்தையினாலும், அக்ஞானத்தினாலும் வீழ்த்தப்பட்டுள்ளேன். நான் எவ்வித சாதனைகளையும் செய்யவில்லை. ஆகவே என்னுடைய இந்த ஜன்மம் வீணாகிப்போகிறது.

तुझे प्रीतिचे दास निर्माण जाले ।
असंभाव्य ते कीर्त्ति बोलोनि गेले ।।
बहू धारणा थोर चक्कीत जालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।४।।

துஜே ப்ரீதிசே தாஸ நிர்மாண ஜாலே ।
அஸம்பாவ்ய தே கீர்த்தி போலோனி கேலே ॥
பாஹூ தாரணா தோர சக்கீத ஜாலோ ।
துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 4

**தாரணா** - அறிந்துகொள்ளுதல். **சக்கீத** - ஆச்சர்ய.

ஏ ராமா ! உன்னுடைய கிருபைக்கு பாத்திரமானவர்களில் உன்னிடத்தில் அன்பு செலுத்தும் பக்தர்கள் கணக்கிலடங்கா. எல்லாவற்றிலும் ராமநாமம் நிறைந்துள்ளது. ஆத்ம ஞானத்தால்தான் அடைய முடிந்தது. அவர்களுடைய இந்த ஞானத்ததை அறிந்து நான் மிகவும் ஆச்சர்யமடைந்தேன். இப்பேர்ப்பட்ட

ஆத்ம ஞானத்தால்தான் பல்வேறு சத்புருஷர்களின் கீர்த்தி வெளித்தோன்றியது. அவர்களுடைய பிறப்பும் தன்யமானது. இருப்பினும் என்னுடைய பிறப்பில் உனக்கு எவ்வித சேவை செய்யாமலும் வீணாக கழித்துக்கொண்டிருக்கிறேன்.

बहुसाल देवालयें हाटकाचीं ।
रसाळा कळा लाघवें नाटकाचीं ।।
पुजा देखतां जाड जीवीं गळालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।५।।

*பஹு ஸால தேவாலயே ஹாட காசீ।*
*ரஸாளா களா லாகவே நாட காசீ ॥*
*புஜா தேகதா ஜாட ஜீவீ களாலோ।*
*துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 5*

**பஹுசால** - தீர்க்க காலம், பல வருடங்கள். **ஹாடகாசீ** - தங்கமுலாம் பூசிய. **லாகவே** - சாதுர்யம். **ஜாடஜீவீ** - பாண்டித்யம் நிறைந்த. **களாளோ** - ஆராதனை.

பல்வேறு வருடங்களாக புதிது புதிதாக கோவில்களில் தங்கமுலாம் பூசி நிர்மாணிக்கப்பட்டன. அதற்காக அதிகப்படியான பொருட்செலவு ஏற்பட்டது. கோவில்களில் இறைவனுக்கு முன்பு பல்வேறு ஆராதனைகள் செய்யப்பட்டன. பாண்டித்யம் நிறைந்த உன்னுடைய பக்தர்கள் தங்களுடைய இனிமையான குரலில் பாடுகின்றார்கள். மற்றும் பலர் உன்னை மிகவும்

நன்றாக பூஜை செய்து ஆராதிக்கிறார்கள். இவற்றில் எவையும் நான் செய்வதில்லை. ஆகையால் என்னுடைய இந்த பிறப்பானது வீணாகி கொண்டிருக்கிறது.

कितेकीं देहें त्यागिले तूजलागी ।
पुढे जाहले संगतीचे विभागी ।।
देहेदुःख होतांचि वेगीं पळालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।६।।

*கிதேகி தேஹே த்யாகிலே தூஜலாகி ।*
*புடே ஜாஹலே ஸங்க தீசே விபாகீ ॥*
*தேஹே துக்க ஹோதாஞ்சி வேகீ பலாலோ ।*
*துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 6*

**விபாகி** - ஈடுபடுதல். **வேகீ** - துரிதம், வேகம்.

உன்னிடத்தில் பக்தி செய்ய முற்படும் பக்தர்கள் அவர்களுடைய விருப்பு - வெறுப்புகளைத் தியாகம் செய்து, உன்னுடைய சகவாசத்தினால் ஆழ்ந்த பக்தியில் ஈடுபட ஒன்றிணைகிறார்கள்/ஈடுபடுகிறார்கள். நான் கூட அவ்வாறு பக்தி செய்ய பிரயத்தினம் செய்தேன். இருப்பினும் என்னுடைய தேகத்திற்கு துக்கம்/துன்பம் ஏற்பட்டதினால் நான் எல்லாவற்றையும் விட்டு துரிதமாக ஓடினேன். ஆகையினால் உன்னிடத்திலிருந்து நான் வெகுதூரம் செல்லவேண்டியதாயிற்று. உன்னுடைய தாஸன் என்று சொல்வதில் எனக்கு வெட்கமாக உள்ளது. என் செய்வேன் எனது பிறப்பு வீணாகிக் கொண்டிருக்கிறது.

किती योगमूर्ती किती पुण्यमूर्ती ।
किती धर्मसंस्थापना अन्न शांती ।।
परस्तावलों कावलों तप्त जालों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।७।।

*கிதீ யோகமூர்த்தி கிதீ புண்யமூர்த்தீ ।*
*கிதீ தர்ம ஸம்ஸ்தாபனா அன்ன சாந்தி ॥*
*பரஸ்தாவலோ காவலோ தப்த ஜாலோ ।*
*துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 7*

யோகாப்பியாஸத்தில் பல்வேறு கடின தபங்கள் செய்து முக்தியடைந்த பக்தர்கள் பலர். கர்ம மார்கத்தை கடைபிடித்து புண்ணிய மார்க்கத்தில் சென்றவர் பலர். தர்மத்தை நிலை நாட்டவும், ஸ்தாபிக்கவும் வழிவகுத்தவர் பலர். அன்னதானம் செய்தவர்கள் பலர். அவற்றினால் முக்தியடைந்தவர்கள் பலர். இவ்வாறு பல்வேறுபட்ட செயல்களில் பக்தியுடன் ஈடுபட்டவர்கள் யாவரும் நற்கதியடைவதற்கு இச்செயல்களில் ஈடுபட்டனர். ஆனால் நான் மட்டும் எவ்வித செயலிலும் ஈடுபடாமல் என்னுடைய வாழ்நாட்களைக் கடத்தியுள்ளேன். இதை அறியும் போது என்னையே நான் வெறுக்கின்றேன். என்னுடைய இந்த பிறப்பானது. வீணாகிக்கொண்டிருக் கிறது என்பதை நன்கு அறிந்துகொண்டேன்.

सदा सर्वदा राम सांडूनि कामीं ।
समर्था तुझे दास आम्ही निकामी ।।
बहू स्वार्थ बुद्धिन रे कष्टवीलों ।
तुझा दास मी व्यर्थ जन्मास आलों ।।८।।

ஸதா ஸர்வதா ராம ஸாண்டூனி காமீ ।
ஸமர்த்தா துஜே தாஸ ஆம்ஹீ நிகாமீ ॥
பஹு ஸ்வார்த்த புத்தி நரே கஷ்ட வீலோ ।
துஜா தாஸ மீ வ்யர்த்த ஜன்மாஸ ஆலோ ॥ 8

நிகாமீ - செயலற்றவன், உபயோகமில்லாதவன்.

ஏ ராமா ! நான் உன்னுடைய தாஸன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவையாவும் வாய்ச் சொல்தான். காரணம் உன்னை மறந்து தேக போகத்தில் இருப்பதினால் உன்னைத் தவிர்த்து வேறு விஷயங்களில் மனம் செயல்படுவதால், செயலற்றவனாகி பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றேன். உண்மையான சாஸ்வதமான ஆனந்தத்திலிருந்து நான் விலகிச் செல்கிறேன். இவ்வாறாக என்னுடைய பிறப்பு வீணாகிக்கொண்டிருக்கிறது.

## ३. ।। श्री रामावर भार ।।

## 3. ஸ்ரீராமாவர பார

नसे भक्ति ना ज्ञान ना ध्यान काहीं ।
नसे प्रेम हें राम विश्राम नाहीं ।।
असा दीन अज्ञान मी दास तूझा ।
समर्था जनीं घेतला भार माझा ।।१।।

*நஸே பக்தி நா க்ஞான நா த்யான காஹீ ।*
*நஸே ப்ரேம ஹே ராம விஸ்ராம நாஹீ ॥*
*அஸா தீன அக்ஞான மீ தாஸ் தூஜா ।*
*ஸமர்த்தா ஜனீ கேதலா பார மாஜா ॥ 1*

**த்யான** - சிந்தனை, ஒருநிலைப்படுத்துதல். **ப்ரேம**- அன்பு செலுத்துதல். **விஸ்ராம** - விஸ்ராந்தி, இறுதிநிலை, மோக்ஷம். **பார** - பொறுப்பு, கவனத்துடன் கண்காணிப்பது.

ராமா ! என்னிடத்தில் பக்தி இல்லை. ஞானம் இல்லை. மனம் ஒன்றுபடவில்லை. இறைவனிடத்தில் அன்பு ஏற்படவில்லை. இதன் காரணமாக நான் அந்திம அவஸ்தையில் இருந்து விடுபட்டு மோக்ஷ மார்க்கம் செல்ல முடியவில்லை. மக்கள் பார்வையில் நான் பாவியாகவும், தரித்திரமானவனாகவும் தென்பட்டாலும் நான் உன்னுடைய சேவை செய்யும் தாஸனாவேன். என்னுடைய பொறுப்புகளை கைமேற்கொண்டு மக்களைக் காத்தருளுபவனே.

रघुनायका जन्म जन्मांतरींचा ।
अहंभाव छेदोनि टाकीं दिनाचा ।।
जनीं बोलती दास या राघवाचा ।
परी अंतरी लेश नाहीं तयाचा ।।२।।

*ரகுநாயகா ஜன்ம ஜன்மாந்தரீசா ।*
*அஹம்பாவ சேதோனீ டாகீ தினாசா ॥*
*ஜனீ போலதீ தாஸ யா ராகவாசா ।*
*பரீ அந்தரீ லேச நாஹீ தயாசா ॥ 2*

**ஜன்ம ஜன்மாந்தரீசா** - முழுமுதற் ஜென்மத்தில் இருந்து தற்போது அநேக ஜன்மங்களிலும். **சே தோனி**- அச்சுறுதல். **லேஸ** - சூக்ஷுமமான தன்மை, சொற்ப அம்சம், துளியாகவும்.

ராகவனே ! முற்பிறவியில் அநேக ஜன்மங்கள் எடுத்தும் தற்போது இந்த ஜன்மாவிலும் நான் என்ற அஹங்காரம் எனக்கு கூடவே இருப்பதினால் உன்னுடைய அம்சத்தில் துளியளவு கூட எனக்கு பிராப்தி கிடைக்கவில்லை . ஆகையினால் ஏ ராகவனே ! இந்த பாபியான ஏழ்மையான தாஸனின் அஹங்காரத்தை நீ அகற்றிவிடு. உன்னுடைய தாஸனாகிய என்னைப் பார்த்து மக்கள், ராகவனுடைய தாஸன் எனக் கூறுகிறான் என்று ஏளனம் செய்கின்றனர். இருப்பினும் எனது மனதில் துளியளவும் எண்ணம் இருந்ததில்லை.

रघुनायका दीन हाती धरावें ।
अहंभाव छेदोनियां उद्धरावें ।।
अगूणी तया लागिं गूणी करावें ।
समर्थे भवसागरीं ऊतरावें ।।३।।

ரகுநாயகா தீன ஹாதீ தராவே।
அஹம்பாவ சேதோனியா உத்தராவே ॥
அகூணி தயா லாகீ கூணி கராவே ।
ஸமர்த்தே பவஸாகரீ ஊதராவே ॥ 3

**அகூணீ** - குணமில்லாதவன், அவகுணம் கொண்டவன். **பவஸாகர** - கடல்.

ரகுநாயகா ! என்னிடம் காணப்படும் அவகுணங்களை நீக்கி உன்னுடைய தாஸனாகிய என்னை நற்குணங்கள் நிறைந்தவனாக மாற்றி, எல்லாவல்லமைகளும் படைத்த நீ இந்த பூவுலகில் தோன்றி என்னிடம் காணப்படுகின்ற அஹங்காரம், த்வேசம் இவையாவற்றையும் அழித்து இந்த பிரபஞ்சக்கடலில் தத்தளிக்கும் என்னை கடைத்தேற்றுவாயாக.

किती भार घालूं रघुनायकाला ।
मज कारणें शीण होईल त्याला ।।
दिनानाथ हा संकटीं धाव घालीं ।
तयाचेनि हे सर्व काया निवाली ।।४।।

*கிதி பார காலூ ரகுநாய காலா।*
*மஜ காரணே ஸீண ஹோயீல த்யாலா॥*
*தினா நாத ஹா ஸங்கடீ தாவ காலீ॥*
*தயா சேனி ஹே ஸர்வ காயா நிவாலீ ॥ 4*

**ஸங்கடீ** - கடினம், சங்கடமான நிலை. **காயா** - தேஹம், சரீரம், மனம். **நிவாலீ** - சாந்தம், அமைதி.

ராகவனிடத்தில் நான் எவ்வளவு பாரத்தை சுமக்க செய்வேன். காரணம் பிரபஞ்சத்தில் உள்ள மோக மாயையில் வீழ்ந்திருக்கும் என்னையும் என்னைப் போன்றவர்களையும் கடைத்தேற்றுவதற்கு நான் இறைவனிடத்தில் வினவியுள்ளேன். என்னுடைய சங்கடமான மனநிலையை அறிந்த இறைவன் மனமிரங்கி ஓடோடி வருகிறான். இதனால் இறைவனுக்கு மிகவும் சிரமம் ஏற்படும். இருப்பினும் அவனுடைய வருகையால் என்னுடைய எல்லாவிதமான கவலைகளையும் மறந்து மனது அமைதியாகக் காணப்படுகிறது.

मज कोंवसा राम कैवल्यदाता ।
तयाचेनि हे फीटली सर्वचिंता ।।
समर्था तया काय उत्तीर्ण व्हावे ।
सदा सर्वदा नाम वाचे वदावे ।।५।।

*மஜ கோவஸா ராம கைவல்ய தாதா।*
*தயாசேனி ஹே பீடலீ ஸர்வ சிந்தா ॥*
*ஸமர்த்தா தயா காய உத்தீர்ண வாவே ।*
*ஸதா ஸர்வதா நாம வாசே வதாவே ॥ 5*

**கோவஸா**- காத்தருளுபவன், ஆதரிப்பவன். **கைவல்ய தாதா** - மோக்ஷம் அளிப்பவன். **பிடணே** - போக்குபவன், முக்தியடையச் செய்தல், விடுபடுதல். **உத்தீர்ண** - தேர்ச்சியடைதல், வீடுபேறு.

என்னைக் காத்தருளுபவனே ! ராமனே ! நீ மோட்சத்தை அளிக்கக்கூடியவன். நீ தான் என்னுடைய தேவையில்லா சிந்தனை யாவற்றையும் போக்குகிறாய். ஏ ராமா ! சாமர்த்தியமானவனே ! என்னுடைய நாவிலிருந்து சதா சர்வகாலமும் உன்னுடைய நாமம் சொல்லும் அளவிற்கு என்னை அனுக்ரகம் செய்து, எனக்கு வீடுபேறு கொடுப்பாயாக.

दिनाचें उणे दीसतां लाज कोण्हा ।
जगीं दास दीसे तुझा दैन्यवाणा ।।
शिरीं स्वामी तूं राम पूर्णप्रतापी ।
तुझा दास पाहें सदा शीघ्र कोपी ।।६।।

*தினாசே உணே தீஸதா லாஜ கோண்ஹா ।*
*ஜகீ தாஸ தீஸே துஜா தைன்ய வாணா ॥*
*ஸிரீ ஸ்வாமி தூ ராம பூர்ண ப்ரதாபீ ।*
*துஜா தாஸ பாஹே ஸதா சீக்ர கோபீ ॥ 6*

**உணே** - குறைபாடு, தோஷம். **ஸிரீ** - தலைக்காப்பான்.

அஹங்காரம் குடிகொண்ட உன்னுடைய தாஸன் மிகவும் பலவீனமாகவும், தரித்திரனாகவும் குறைபாடுடன் உள்ளான் என்று என்னைப் பார்த்து எவரேனும் கூறினால், அந்த தோஷமும், குறையும் யாரைச்சேரும். உனக்குத்தான். காரணம் என்னுடைய சுக சௌக்கியத் திற்கும், தலைகாப்பானாக இருந்தும், வழிவகுத்து என்னைப் பரிபூரணமாக ஆக்கியவனு நீயே ஆவாய். இந்த தாஸனை எவரேனும், எப்பொழுதும் அவமதிக்கும் அளவிற்கு நீ விடுபவன் அல்ல.

## ४. ।। रघुनायका मागणें हेंचि आतां ।।

## 4. ரகுநாயகா மாகணே ஹேசீ ஆதா

उदासीन हे वृत्ति जीवीं धरावी ।
अती आदरें सर्व सेवा करावी ।।
सदा प्रीति लागो तुझे गूण गातां ।
रघुनायका मागणें हेंचि आतां ।।१।।

*உதாஸீன ஹே வ்ருத்தி ஜீவீ தராவீ ।*
*அதீ ஆதரே ஸர்வ ஸேவா கராவீ ॥*
*ஸதா ப்ரீதி லாகோ துஜே கூண காதா ।*
*ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 1*

***உதாஸீன*** - விரக்தி. ***வ்ருத்தி*** -மனநிலை, பாவனை. ***ஆதரே*** - மாண்பு. ***ப்ரீதி*** - அன்பு, பரிவு.

ராமா ! என் மனதில் விரக்தி வைராக்கியம் ஏற்படுவதற்கு வழி செய்வாயாக. அதனால் மனதில் எப்பொழுதுமே உன்னுடைய குணங்களைப் பாடுவதற்கும், வர்ணிப்பதற்கும் என்னிடத்தில் எப்பொழுதும் இந்த பரிவு இருக்கட்டும். ரகுநாயகனே ! இதைத்தான் உன்னிடத்தில் நான் கேட்கின்றேன்.

तुझे रूपडे लोचनी म्यां पहावें ।
तुझे गूण गाता मनासी रहावें ।।
उठो आवडी भक्ति पंथेंचि जातां ।
रघुनायका मागणें हेंचि आतां ।।२।।

*துஜே ரூபடே லோசனீ ம்யா பஹாவே ।*
*துஜே கூண காதா மனாஸீ ரஹாவே ॥*
*உடோ ஆவடீ பக்தி பந்தேசி ஜாதா ।*
*ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 2*

**ரூபடே**- உருவம், ஸ்வரூபம். **லோசனீ** - நேத்ரம், த்ருஷ்டி, கண்கள்.

உன்னுடைய உருவத்தினை கண்களால் பார்த்துக் கொண்டே இருப்பதும், அவ்வாறே உன்னுடைய குணங்களை மனதில் நிலைநிறுத்திப் பாடுவதும், இவ்வாறாக பக்தி மார்க்கத்திலேயே உனக்குச் சேவை செய்வதில் எனக்கு தனிப்பட்ட பிரியம் ஏற்படுகிறது. நான் உன்னுடையவனாகவும், ஏகரூபமாகவும் ஆவதே விரும்புகிறேன். ரகுநாயகனே ! இதைத்தான் உன்னிடத்தில் நான் கேட்கின்றேன்.

मनीं वासना भक्ति तूझी करावी ।
कृपाळूपणें राघवें पूरवावी ।।
वसावें मज अंतरीं नाम घेतां ।
रघुनायका मागणें हेंचि आतां ।।३।।

*மணி வாஸனா பக்தி தூஜீ கராவீ ।*
*க்ருபாளூ பணே ராகவே பூரவாவீ ॥*
*வஸாவே மஜ அந்தரீ நாம கேதா ।*
*ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 3*

**வாஸனா** - இச்சை. **வஸாவே** -ஸ்தாபிதம், நேர்த்திக்கடன்.

ரகுநாயகனே ! நான் உன்னிடத்தில் விருப்பத்துடன் வேண்டுகிறேன். அது என்னவென்றால் நான் உன்னுடைய பக்தனாக இருந்து பக்தி செலுத்துவதே என்னுடைய விருப்பமாகும். நீ கிருபை புரிபவனாவாய். ஆகையால் நீ என்னுடைய நேர்த்திக் கடனை நிறைவேற்றுவாய். அவ்வாறே உன்னுடைய நாமத்தை சதாசர்வ காலமும் நினைக்கும் வண்ணம் நீ என்னுடைய இருதயத்தில் வாசம் செய்வாய்.

सदा सर्वादा योग तुझा घडावा ।
तुझे कारणीं देह माझा पडावा ।।
उपेक्षू नको गुणवंता अनंता ।
रघुनायका मागणें हेंचि आतां ।।४।।

ஸதா ஸர்வதா யோக தூஜா கடாவா ।
துஜே காரணீ தேஹ மாஜா படாவா ॥
உபேக்ஷு நகோ குணவந்தா அனந்தா ।
ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 4

**யோக** - பரஸ்பர சம்பந்தம். **உபேக்ஷு** - லக்ஷியம் செய்யாதிருத்தல். **குணவந்த** - நற்குணங்கள் பொருந்தியவன். **அனந்த** - யாருக்கு முடிவு இல்லையோ அவன், சாஸ்வதமானவன்.

ராமா ! எனக்கு எப்பொழுதும். சதா சர்வ காலமும் உன்னுடைய பரஸ்பர சம்பந்தத்திலேயே இருக்குமாறு வழி செய்வாயாக. என்னுடைய இந்த தேகமானது வேறு எச்செயலிலும் லக்ஷியம் செய்யாமல் உன்னிடத்தில் பக்தி

செய்வதற்காகவே உபயோகப்படட்டும். ஏ அனந்தனே ! குணவந்தனே ! நற்குணங்கள் பொருந்தியவனே ! உன்னிடத்தில் பிரார்த்திக்கப்படும் என்னுடைய வேண்டுகோளே இதுதான்.

नको द्रव्यदारा नको येरझारा ।
नको मानसीं ज्ञानगर्वे फुगारा ।।
सगुणीं मज लाविरें भक्ति पंथा ।
रघुनायका मागणें हेंचि आतां ।।५।।

நகோ த்ரவ்யதாரா நகோ யேர ஜாரா ।
நகோ மானஸீ க்ஞானகர்வே புகாரா ॥
ஸகுணீ மஜ லாவிரே பக்தி பந்தா ।
ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 5

***தாரா- பத்தினி, மனைவி. யேரஜாரா - ஜனன-மரணம், ஜன்ம-ம்ருத்யு. புகாரா - அஹங்காரம்.***

எனக்கு பொருள் தேவையில்லை. பத்தினி (மனைவி) தேவையில்லை. அவ்வாறே பிறப்பு-இறப்பு ஏற்படக்கூடிய இந்த ஜன்மமும் எனக்குத் தேவையில்லை. இதைத்தவிர என்னுடைய மனதில் ஒரு கணப் பொழுதிலும் அக்ங்காரம் எப்பொழுதும் ஏற்படா வண்ணம் அருள் செய்வாயாக. இதற்காக நீ என்னை சகுணோபாசனமாகிய பக்தி மார்கத்திலேயே ஈடுபடச் செய்வாயாக ரகுநாயகனே ! இதைத்தான் நான் உன்னிடத்தில் கேட்கின்றேன்.

भवें व्यापलों प्रीतिछाया करावी ।
कृपा सागरें सर्वचिंता हरावी ।।
मज संकटीं सोडवावें समर्था ।
रघुनायका मागणें हेंचि आतां ।।६।।

பவே வ்யாபலோ ப்ரீதிசாயா கராவீ ।
க்ருபா ஸாகரே ஸர்வ சிந்தா ஹராவீ ॥
மஜ ஸங்கடீ ஸோட வாவே ஸமர்த்தா ।
ரகுநாய்கா மாகணே ஹேசி ஆதா ॥ 6

*பவே* - ஜன்ம-மரணத்தின் சுழற்சி. **வ்யாபலோ-** பீடை. **ப்ரீதி** - ப்ரேரனம், சிநேகம், கிருபை, உதவுதல். **சாயா** - ரக்ஷித்தல், நிழல். **ஹராவீ** - கஷ்டம் நிவர்த்தி செய்தல், நிவாரணம் செய்தல்.

ஜன்ம மரண சுழற்சியுடைய பிரபஞ்சம்தான் உண்மையான சாஸ்வதமான சுகம் அளிக்கவல்லது. இதை அறியாமல் பிரமையினால் சூழ்ந்துகொண்டு அவதிப்படுகிறேன். ஏ க்ருபாகரனே ! நீ என் மேல் கிருபை செய்து என்னை ரக்ஷித்து எல்லா சிந்தனைகளையும், துக்கங்களையும் நிவர்த்தி செய்வாயாக. பல்வேறு சங்கடங்களிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் என்னை விடுவிப்பாயாக. ரகுநாயகனே ! இதைத்தான் நான் உன்னிடத்தில் வினவுகிறேன்.

मनीं कामना कल्पना ते नसावी ।
कुबुद्धी कुडी वासना नीरसावी ।
नको संशयो तोडिं संसारवेथा ।
रघुनायका मागणें हेंचि आतां ।।७।।

மனீ காமனா கல்பனா தே நசாவீ ।
குபுத்தீ குடீ வாஸனா நீரஸாவீ ॥
நகோ ஸம்சயோ தோடீ ஸம்ஸார வேதா ।
ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 7

**காமனா** - இச்சை, அபிலாசை. **கல்பனா** - கற்பனை, வாசனை. **குடீ** - தேஹம், சரீரம். **ஸம்சயோ**- சந்தேகம். **நிரஸணே** - இல்லாமல் செய்தல், நிவர்த்தி செய்தல். **வ்யதா** (வேதா) - துக்கம், துயரம்.

துர்புத்தியினால் தேகம் பல்வேறு அபிலாஷையின் காரணமாக மனதில் ஏற்படும் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றது. அவற்றின் வாசனையால் மனதில் இறைவனின் சிந்தனை ஏற்படுவதில்லை. சிந்தனை களால் பிரமை பிடித்தவன் போல் ஆகின்றேன். உண்மைநிலை அறியமுடியவில்லை. அதனால் இறைவனின் தரிசனம் கிடைப்பதில்லை. ஆகவே, ஏ ராமா பிரபஞ்சத்தில் துக்கம், துன்பம் ஏற்படுத்தும் என்னுள் இருக்கும் இந்த காம வாசனைகளை இல்லாமல் நீ செய்வாயாக. ரகுநாயகனே ! இதைத்தான் நான் உன்னிடத்தில் கேட்கின்றேன்.

समर्थापुढे काय मागों कळेना ।
दुराशा मनीं बैसली हे ढळेना ।।
पुढें संशयो नीरसीं सर्व चिंता ।
रघुनायका मागणें हेंचि आतां ।।८।।

*ஸமர்த்தா புடே காய மாகோ களேனா ।*
*துராசா மனி பைஸலீ ஹே டளேனா ॥*
*புடே ஸம்சயோ நீரஸீ ஸர்வ சிந்தா ।*
*ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 8*

***ஸமர்த்த** - பலவான், திறமையானவன். **துராசா** - கேடு நினைப்பவன். **டளேனா** - ஸ்திரம் கொண்டவன், அஞ்சாதவன்.*

*சாமர்த்தியமானவனே ராமா ! உன்னிடத்தில் எதைப் பெறுவது என்று கூட எனக்குத் தெரியவில்லை. காரணம் மனதில் கேடு நினைப்பவனாகக் காணப் படுகின்றேன். மனதில் ஏற்பட்டுள்ள இந்த நிலைத்த தன்மையில்லாமல் நான் எதற்கும் அஞ்சாதவனாகத் தெரிகின்றேன். என்ன செய்வதென்று செரியவில்லை. ஆகவே, ரகுநாயகா ! இந்த எல்லாவிதமான துக்கத்தினையும் நீ போக்கி விடுவாயாக. ரகுநாயகனே ! இதைத்தான் நான் உன்னிடத்தில் கேட்கின்றேன்.*

ब्रिदाकारणें दीन हातीं धरावें ।
**म्हणे दास** भक्तांसि रें उद्धरावें ।
सुटो ब्रीद आम्हांसी सांडूनि जाता ।
रघुनायका मागणें हेंचि आतां ॥९॥

*ப்ரிதாகாரணே தீன ஹாதீ தராவே ।*
***மணே தாஸ** பக்தாஸி ரே உத்தராவே ॥*
*ஸுடோ ப்ரீத ஆம்ஹாஸீ ஸான்டூனி ஜாதா ।*
*ரகுநாயகா மாகணே ஹேசி ஆதா ॥ 9*

**தீன** - ஏழை, எளியவன். **உத்தராவே** - விடுதலை அளித்தல், கடைத்தேற்றுதல். **ப்ரீதி** - விரதம், பிரதிக்ஞை. **ஸான்டூணி** - விடுதல், தியாகம் செய்தல்.

ஏ ராமா ! சரணமடைந்த பக்தர்களை நீ காத்தருள்கிறாய். இது உன்னுடைய பிரதிக்ஞையாகக் கருதுகிறாய். உன்னுடைய இந்த பக்தர்களை ஸம்ஸார சாகரத்திலிருந்து நீ கடைத்தேற்றுவாயாக. என்னுடைய தலைவனாகிய உன்னிடத்தில் கேட்பது இதுதான். அவ்வாறு நீ செய்யாவிடில், நீ உன்னுடைய பக்தர்களைத் தியாகம் செய்தவனாய், அவர்களைக் கடைத் தேற்றவில்லையென்றால் உன்னுடைய பிரதிக்ஞை யாவும் பொய்யாகக் கருதப்படும். எனவே, ஏ ராமா ! உன்னுடைய எளிய பக்தனாகிய என்னையும் கடைத்தேற்றுவாயாக.

## ५. ।। बुद्धि दे रघुनायका ।।

## 5. புத்தி தே ரகுநாயகா

युक्ति नाहीं बुद्धि नाहीं । विद्या नाहीं विवंचिता ।।
नेणता भक्त मी तुझा । बुद्धि दे रघुनायका ।।१।।

*யுக்தி நாஹீ புத்தி நாஹீ । வித்யா நாஹீ விவஞ்சிதா ॥*
*நேணதா பக்த மீ துஜா । புத்தி தே ரகுநாயகா ॥ 1*

**யுக்தி** - யுக்தி, புத்தி. **விவஞ்சிதா** - எண்ணம், விவேகம். **நேணதா** - அக்ஞானி, அறியாதவன்.

சமர்த்தர் ஸ்ரீ ராமனிடம் நல்ல புத்தி தந்தருளும்படி வேண்டுகிறார். ராமா ! என்னால் எவ்வித யுக்திகளையும் கையாள முடியவில்லை. புத்தியும் இல்லை. கல்வி அறிவுமில்லை. எண்ணமும் திடமானதாக இல்லை. இவ்வாறாக எதுவும் அறியப்படாத அக்ஞானியாக இருக்கும் எனக்கு நல்ல புத்தியை கொடுப்பாயாக.

मन हें आवरेना कीं । वासना वावडे सदा ।।
कल्पना धावते सैरा । बुद्धि दे रघुनायका ।।२।।

*மனஹே ஆவரேனா கீ । வாஸனா வாவடே ஸதா ॥*
*கல்பனா தாவதே ஸைரா । புத்தி தே ரகுநாயகா ॥ 2*

**வாஸனா** - இச்சை, ப்ரவிருத்தி. **வாவடே** - தவிர்த்தல், நிராசை. **சதா** - எப்போதும். **கல்பனா** - கற்பனை, அனுமானம், யோசனை.

என்னுடைய மனமானது நிலையாக இல்லை. மனம் எச்செயலிலும் இச்சையில்லாமல் நிராசையுடனும், துயரத்துடனும் காணப்படுகிறது. இவ்வாறான ஒரு நிலை மனதில் இருந்துகொண்டே இருக்கிறது. மனம் ஓர் இடத்தில் இல்லாமல் அலை பாய்கின்றது. ஆகவே, எனக்கு நல்ல புத்தியைத் தந்தருள்வாயாக.

अन्न नाहीं वस्त्र नाहीं । सौख्य नाहीं जनांमध्यें ।।
आश्रयो पाहता नाहीं । बुद्धि दे रघुनायका ।।३।।

அன்ன நாஹீ வஸத்ர நாஹீ। ஸௌக்ய நாஹீ ஜனா
மத்யே ॥
ஆஸ்ரயோ பாஹதா நாஹீ। புத்தி தே ரகுநாயகா ॥ 3

**ஸௌக்ய** - சமாதானம். **ஆஸ்ரயோ** - பாதுகாப்பு, ஆதாரம்.

சமர்த்தர் இந்த ஸ்லோகத்தில் தற்போதைய சமுதாயத்தின் நிலைமையை வர்ணிக்கிறார். உண்பதற்கு உணவு இல்லை. உடுப்பதற்கு உடையில்லை. மனம் சமாதானம் அடைவதில்லை. ஏதோ ! ஒப்புக்கான வாழ்வு வாழ்கிறார்கள். பாதுகாப்பு இல்லை. ஆகையினால் இவையாவும் தவிர்ப்பதற்கு நல்ல புத்தியை தருமாறு பிரார்த்திக்கிறார்.

बोलतां चालतां येना । कार्यभाग कळेचिना ।।
बहुत पीडिलों लोकीं । बुद्धि दे रघुनायका ।।४।।

போலதா சாலதா யேனா । கார்ய பாக களேசினா ॥
பஹுத பீடிலோ லோகீ । புத்தி தே ரகுநாயகா ॥ 4

**கார்ய பாக** - ஈடுபாட்டுடன் செயல்படும் செயல். **பீடிலோ** - துக்கமடைதல். **லோகீ** - மக்கள், சமுதாயம்.

அக்ஞானியானதால் சரியாகப் பேசக்கூட முடியாமல் தவிக்கிறேன். புத்தியில்லாமை காரணமாக எதிலும் ஈடுபாட்டுடன் சரியாகச் செயல்பட முடியவில்லை. நாட்டில் காணப்படுகிற நிலைமையைக் கண்டு மனம் வருந்தி, சமுதாய நிலை, இறைவழிபாடு, அரசாட்சி நிதி நிலையை, தரித்திரம், பெண்கொடுமை, இவ்வாறான நிலையில் மக்கள் பல்வேறு வகையில் அவதிப்படுகிறார்கள். இவர்களின் நலனுக்காக சமர்த்தர் நல்ல புத்தியை கொடுக்க வேண்டுகிறார்.

तुझा मी टोणपा जालों । कष्टलों बहुतांपरी ॥
सौख्य तें पाहतां नाहीं । बुद्धि दे रघुनायका ॥५॥

துஜா மீ டோணபா ஜாலோ । கஷ்டலோ பஹுதாபரி॥
ஸௌக்ய தே பாஹதா நாஹீ । புத்தி தே ரகுநாயகா ॥ 5

**டோணபா** - மூர்க்கன், படிப்பறிவில்லாதவன்.

ராமா ! மற்றவர்களைப் போல் நான் படிப்பறிவில்லாதவனாக உள்ளேன். காரணம் எனக்கு சௌக்கியம், சமாதானம் என்பதே இல்லாமல் போய்விட்டது. சமாதானம் என்பது மனதை ஒரு நிலைப்படுத்தல் ஆகும். மனதில் தோன்றும் பல்வேறு

காரணங்களி லிருந்து விலகி செயல்படுதல். இவ்வாறான நிலையில் ஸ்ரீ சமர்த்தர் ராமனிடம் நல்ல புத்தி கிடைக்க வேண்டி பிரார்த்தனை செய்கிறார்.

नेटकें लिहितां येना । वाचितां चुकतों सदा ।।
अर्थ तों सांगतां येना । बुद्धि दे रघुनायका ।।६।।

நேடகே லிஹிதா யேனா । வாசிதா சுகதோ ஸதா ।।
அர்த்த தோ ஸாங்கதா யேனா । புத்தி தே ரகுநாயகா ।। 6

**நேடகே**- *சரியாக, முறையாக.*

நல்ல முறையில் சரியாக எழுத வரவில்லை. படிக்க வேண்டுமென்றால் அவற்றில் பல பிழைகள் காணப் படுகிறது. வாக்கியத்தின் அர்த்தம் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகையினால் தெளிவு பெற முடிய வில்லை. எழுதுதல், படித்தல், புரிந்துகொள்ளுதல் இவையாவும் அறியமுடியவில்லை. ஆகையினால் ராமா ! இவர்களுக்கு நல்ல புத்தியைத் தந்தருளுமாறு வேண்டுகிறேன்.

प्रसंग वेळ तर्केना । सुचेना दीर्घ सूचना ।।
मैत्रिकी राखितां येना । बुद्धि दे रघुनायका ।।७।।

ப்ரஸங்க வேள தர்கேனா । ஸுசேனா தீர்க்க ஸூசனா ।।
மைத்ரிகீ ராகிதா யேனா । புத்தி தே ரகுநாயகா ।। 7

**தர்கேனா** - *அனுமானம்.* **மைத்ரிகீ** - *நண்பன், நட்பு.*

ஒரு காரியம் செயல்படுத்தும்போது அந்நேரத்தில் புரிந்துகொண்டு செயல்பட முடியாமல் அனுமானத்துடன் கூட செயல்பட முடியவில்லை. ஒன்றும் புரிவதும் கிடையாது. ஆழ்ந்த யோசனை இல்லை. ஆகையால் சகோதர நட்பும் தொடர முடியவில்லை. காரணம் சகோதரனிடத்தில் முறையான விஸ்வாசம் இருப்பது அவசியம். அவை இல்லாததினால் எப்படி நிலைக்கும் ! இவ்வாறான செயல்பாடுகளுக்கு நல்ல புத்தி கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

संसारी श्लाघ्यता नाहीं । सर्वहीं लोक हांसती ।।
वीसरु पडतो पोटीं । बुद्धि दे रघुनायका ।।८।।

*ஸம்ஸாரீ ஸ்லாக்யதா நாஹீ । ஸர்வஹீ லோக ஹாஸதீ ।।*
*வீஸரு படதோ போடீ । புத்தி தே ரகுநாயகா ।। 8*

**வீஸரு - மறப்பது.**

ஸம்ஸார பந்தத்தில் கௌரவமாக வாழ முடியவில்லை. என்னுடைய நிலையைக் கண்டு ஊர் மக்கள் அனைவரும் சிரிக்கின்றனர். இவை யாவும் மறப்பது உசிதம் என்று நான் மனதில் நினைத்தாலும் முடியவில்லை. ஆகையினால் எனக்கு நல்ல புத்தி கொடுத்தருள்வாயாக.

चित्त दुश्चीत होतां हे । ताळतंत्र कळेचिना ।।
आळसू लागला पाठीं । बुद्धि दे रघुनायका ।।९।।

*சித்த துச்சீத ஹோதா ஹே । தாள தந்த்ர களேசினா ।।*
*ஆளஸூ லாகளா பாடீ । புத்தி தே ரகுநாயகா ।। 9*

***சித்த*** - சிந்தனை. ***தாளதந்த்ர*** - நன்மை/தீமை. ***ஆளஸீ*** - சோம்பேரி.

*சிந்தனை செய்தே மனம் வருந்துகிறது. நன்மை - தீமை இவையாவும் அறிந்துகொள்ள முடியவில்லை. உடலை வருத்திக்கொண்டு எச்செயலையும் செய்யாமலேயே சோம்பேறியாகக் காலத்தைக் கழிக்கின்றேன். எனக்கு நல்ல புத்தியைத் தந்தருள்வாயாக.*

कळेना स्फूर्ति होईना । आपदा लागली बहू ।।
प्रत्यहीं पोट सोडीना । बुद्धि दे रघुनायका ।।१०।।

*களேனா ஸ்பூர்த்தி ஹோயீனா। ஆபதா லாகலீ பஹூ ॥*
*ப்ரத்யஹீ போட ஸோடீனா । புத்தி தே ரகுநாயகா ॥ 10*

***ஸ்பூர்த்தி*** - நிலைத்த தன்மை. ***ஆபதா*** - சங்க. ***போட*** - மன - புத்தியின் விகார நிலை.

*எவ்வாறு பழக வேண்டும் என்பதே தெரியவில்லை. காரணம் மனதில் நிலைத்த தன்மையில்லை. சக்தி-புத்தியின் முதல் படியாகும். மனதில் ஆறுவிதமான விகாரங்கள் இருப்பதினால் (காமம், க்ரோதம், லோபம், மோகம், மத, மாச்சர்யம்) நல்ல புத்தி கிடைப்பதற்கு தடையாக உள்ளது. ஆகவே, ராமா ! நீ என்மேல் தயை செய்வாயாக. நல்ல புத்தியை அளிப்பாயாக.*

संसार नेटका नाहीं । उद्वेग वाटतो जिवीं ।।
परमार्थ आकळेना कीं । बुद्धि दे रघुनायका ।।११।।

*ஸம்ஸார நேடகா நாஹீ । உத்வேக வாடதோ ஜிவீ ॥*
*பரமார்த்த ஆகளேனா கீ । புத்தி தே ரகுநாயகா ॥ 11*

**உத்வேக - துக்கம், துயரம்.**

*சமர்த்தர் கூறுகிறார். இந்த மக்களுடைய வாழ்க்கை நடைமுறை சரியாக இல்லை. இவர்கள் பரமார்த்த மார்க்கம் எவ்வாறு அறிவார்கள். இவ்வாறான செயல்பாடுகளை பார்த்து மனதில் மிகவும் துக்கம் ஏற்படுகிறது. இவற்றிலிருந்து வெளியில் வரவேண்டு மென்றால் ஒரே ஒரு வழிதான் உள்ளது. அது என்னவென்றால் இவர்கள் அனைவருக்கும் நல்ல புத்தி கிடைக்கவேண்டும்.*

देईना पुरविना कोणी । उगेचि जन हांसती ।।
लोकिक राखता येना । बुद्धि दे रघुनायका ।।१२।।

*தேயீனா புரவினா கோணீ । உகேசி ஜன ஹாஸதி ॥*
*லௌகீக ராகதா யேனா । புத்தி தே ரகுநாயகா ॥ 12*

*பரமார்த்தம் எப்படி செய்வது என்று எனக்கு தெரியவில்லை. என்னுடைய நிறை-குறையை எல்லோரும் பேசுகிறார்கள். யாரும் என்னை லட்சியம் செய்வதில்லை. எல்லோரும் என்னைக் கண்டு சிரிக்கிறார்கள். கேலி செய்கிறார்கள். இவை யாவும் நடந்தாலும் உன்னுடைய ஸ்மரணம் செய்யாமல் நான் ஒருநாளும் இருந்ததில்லை. இருப்பினும் ராமா! நீ எனக்கு நல்ல புத்தி கொடுப்பாயாக.*

पिसुणे वाटती सर्वै । कोणीही मजला नसे ।।
समर्था तूं दयासिंधू । बुद्धि दे रघुनायका ।।१३।।

*பிஸுனே வாடதீ ஸர்வை । கோணீஹீ மஜலா நஸே ॥*
*ஸமர்த்தா தூ தயாஸிந்து । புத்தி தே ரகுநாயகா ॥ 13*

***பிஸுனே*** - துஷ்டர், கபடமானவர், பொய் பேசுபவர். **தயாஸிந்து** - கருணைக் கடல்.

என்னைச் சுற்றிலும் எல்லோரும் துஷ்டர்களாகவும் பொய் பேசுபவர்களாகவும், இருக்கின்றனர். ஆகையால் எனக்கென்று யாரும் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் ராமா ! நீ மட்டும் என்னுடயவனாவாய். நீ கருணையில் கடலாவாய். என் மீது கிருபை செய்து எனக்கு நல்ல புத்தியைத் தந்தருள்வாயாக.

उदास वाटतें जीवी । आतां जावें कुणीकडे ।।
तूं भक्तवत्सला रामा । बुद्धि दे रघुनायका ।।१४।।

*உதாஸ வாடதே ஜீவீ । ஆதா ஜாவே குணீகடே ॥*
*தூ பக்தவத்ஸலா ராமா । புத்தி தே ரகுநாயகா ॥ 14*

***உதாஸ*** - விரக்தி, துக்கம்.

வாழ்க்கையில் எவ்வித ஆசையில்லாமல் விரக்தியுடன் இருந்துவிட்டேன். எங்கு செல்வேன். என்ன செய்வேன் என்று எனக்கு வழி தெரியவில்லை. ராமா ! நீ பக்தர்களின் மீது ப்ரேமை செய்பவனாவாய், பக்தர்களுக்கு தயை புரிபவனாவாய், ரகுநாயகனே ! நீ எனக்கு நல்ல புத்தி கொடுத்து காப்பாயாக.

काया वाचा मनोभावें । तुझा मी म्हणवीतसें ।।
हे लाज तुजला माझी । बुद्धि दे रघुनायका ।।१५।।

காயா வாசா மனோபாவே । துஜா மீ மணவீதஸே ॥
ஹே லாஜ துஜலா மாஜி । புத்தி தே ரகுநாயகா ॥ 15

**லாஜ** - வெட்கம், சங்கோஜம்.

சமர்த்தர் கூறுகிறார். உடலாலும், உள்ளத்தாலும், மனதாலும் நான் உன்னுடையவன் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகையினால் உனக்குத்தான் என் மீது வெட்கம் ஏற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் காரணமாக உன்னுடைய புகழுக்குப் பங்கம் ஏற்படும். இவையாவும் உன்னால்தான் ஏற்பட்டது என்று கூறுவேன். அதற்காக ராமா ! நீ எனக்கு நல்ல புத்தியைக் கொடுத்தருள்வாயாக.

सोडवील्या देव कोटी । भूभार फेडिला बळें ॥
भक्तांसि आश्रयो मोठा । बुद्धि दे रघुनायका ॥१६॥

ஸோட வில்யா தேவ கோடீ । பூ பார பேடிலா பலே ॥
பக்தாஸி ஆச்ரயோ மோடா । புத்தி தே ரகுநாயகா ॥ 16

**பேடிலா** - இல்லாமல் செய்வது.

ராமா ! நீ தேவர்களை சிறைவாசத்திலிருந்து விடுதலை பெறச்செய்தாய் மற்றும் பூவுலகில் இருந்த துஷ்டர்களை வதம் செய்து இல்லாமல் செய்தாய். அதனால் பூபாரம் குறைந்தது. நீ உன்னுடைய பக்தர்களை ரக்ஷிப்பவனாக இருக்கிறாய். அவர்களுடைய பக்தியின் செயல்பாட்டினால் நல்ல புத்தியைக் கொடுத்தருள்வாய்.

भक्त उदंड तुम्हाला । आम्हांला कोण पूसतें ॥
ब्रीद हें राखणें आधीं । बुद्धि दे रघुनायका ॥१७॥

பக்த உதண்ட தும்ஹாலா । ஆம்ஹாலா கோண பூஸதே॥
ப்ரீத ஹே ராகணே ஆதீ । புத்தி தே ரகுநாயகா ॥ 17

**உதண்ட**- கணக்கிலடங்கா. **பூஸதே** - விசாரித்தல். **ப்ரீத** - விரதம், சபதம், குறிக்கோள், நோக்கம்.

ராமா ! உனக்கு கணக்கிலடங்கா பக்தர்கள் இருக்கிறார்கள். அதனால் என்னை யார் விசாரிப்பார்கள்? என்னை யார் காண்பார் ? இவ்வாறாக இருந்தாலும் பக்தர்களின் வேண்டுகோளுக்கு நீ ஓடிவந்து காத்தருவாய். ஆகையினால் உன்னுடைய இந்த வசனத்தினைக் காப்பாற்றிக்கொள்வதற்காக நீ ஓடிவந்து என்னுடைய வேண்டுதல்களை நிவர்த்தி செய்வாயாக. எனக்கு நல்ல புத்தியைத் தந்தருள்வாயாக.

उदंड ऐकिली कीर्ती । पतीतपावना प्रभो ।।
मी येक रंक निर्बुद्धी । बुद्धि दे रघुनायका ।।१८।।

உதண்ட ஐகிலீ கீர்த்தீ । பதீத பாவனா ப்ரபோ ॥
மீ யேக ரங்க நிர்புத்தி । புத்தி தே ரகுநாயகா ॥ 18

**ரங்க**- ஏழை, தீனன், பாவி. **நிர்புத்தி** - அற்ப புத்தி.

ஏ பிரபுவே ! நீ தீனர்கள் மற்றும் பாவிகளை கடைத்தேற்றுபன். உன்னுடைய (கீர்த்தி) பெருமையை நான் கேட்டுள்ளேன். நான் ஒரு பாவியாவேன். அற்ப புத்தி கொண்டவனாவேன். ஆகையினால் நீ என் மீது காத்தருளி அற்பமான புத்தியுடைய எனக்கு நல்ல புத்தி தந்தருள்வாயாக.

आशा हे लागली मोठी । दयाळुवा दया करीं ।।
आणीक नलगे कांहीं । बुद्धि दे रघुनायका ।।१९।।

ஆஸா ஹே லாகலீ மோடீ । தயாளுவா தயா கரீ ।।
அணீக நலகே காஹீ । புத்தி தே ரகுநாயகா ।। 19

**ஆஸா** - விருப்பம், இச்சை.

ஏ ! தயாளனே ராமா ! என் மீது தயை புரிவாய் என்ற ஒரு எண்ணத்தோடு (விருப்பத்தோடு) காத்துக்கொண்டு இருக்கிறேன். இதைத்தவிர மற்ற வேறு ஏதுவும் தேவையற்றவையாகும். ரகுநாயகனே ! எனக்கு நல்ல புத்தி அளித்திடுவாயாக.

**रामदास म्हणे** माझा । संसार तुज लागला ।
संशयो वाटतो पोटीं । बुद्धि दे रघुनायका ।।२०।।

**ராமதாஸ மணே** மாஜா । ஸம்ஸார துஜ லாகலா ।।
ஸம்ஸயோ வாடதோ போடீ । புத்தி தே ரகுநாகா ।। 20

**ஸம்ஸார** - பிரபஞ்சம். **ஸம்சய** - பயம், பீதி.

இந்த கடைசி ஸ்தோத்திரத்தில் ஸமர்த்தர் இவ்வாறாகக் கூறுகிறார். என்னுடைய பிரபஞ்சம் உன்னிடத்தில்தான் உள்ளது. ஒருவித எண்ணத்தில் பயத்துடன் அவர்களுடைய செயல்பாடுகளை ராமனிடம் இந்த பரந்த விசாலமான சாகரத்திலிருந்து விடுபட்டு தன்னைக் காத்தருள வேண்டுமென்தனை ஒரு நோக்கத்துடன் மக்கள் இருக்க வேண்டும். அத்துடன் நல்ல புத்தியும் கிடைத்திடுமாறு இறைவனிடத்தில் வேண்டுகிறார்.

## ६. ।। उदासीन हा काळ कोठें न कंठे ।।

## 6. உதாஸீன ஹா காள கோடே ந கண்டே

समाधान साधूजनाचेनि योगें ।
परी मागुतें दुःख होतें वियोगें ।।
घडींने घडी शीण अत्यंत वाटें ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।१।।

*ஸமாதான ஸாதூ ஜனா சேனி யோகே ।*
*பரி மாகுதே துக்க ஹோதே வியோகே ॥*
*கடீனே கடீ ஸீண அத்யந்த வாடே ।*
*உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 1*

**வியோகே** - விரஹம். **கடீ** - நொடிப்பொழுது. ***ஸீண*** - வெறுப்பு, துயரம். ***உதாஸீன*** - ஒதுக்கி வைத்தல்.

சத்புருஷர்களின் சகவாசத்தில் இருந்தால் சுகம் கிடைப்பது உண்மை. இந்த சுகம் எப்பேர்ப்பட்டது என்றால் அது சத்-சித்-ஆனந்த பிராப்தி கிடைக்கும் பேரின்ப சுகமாகும். இவற்றில் சிறிதளவு விரஹம் குறைந்தாலும் அது துக்கமாகவே தோன்றுகிறது ஒவ்வொரு நொடிப்பொழுதும் மனதிற்கு வெறுப்பு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட துக்கம் எக்காலத்திலும் பொறுக்க முடியாது.

घरें सुंदरें सौख्य नाना परीचें ।
परी कोण जाणेल तें अंतरीचें ।।
मनी आठवीतांचि तो कंठ दाटे ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।२।।

கரே ஸுந்தரே ஸௌக்ய நானா பரீசே ।
பரீ கோண ஜாணேல தே அந்தரீசே ॥
மணீ ஆடவீ தாஞ்சீ தோ கண்ட தாடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 2

**கால** - நேரம், நிலை.

நல்ல வீடு, வாசல் உடுத்திக்கொள்ள ஆடை, அணிகலன்கள், வாழ்வதற்குத் தேவையான பொருள்கள், பணம் இவையாவும், ஒரு சாதாரண மனிதனுக்குக் கிடைத்தால் மிகவும் சுகமாகவும், சௌக்கியமாகவும் வாழ்வான். இருப்பினும் அவனது உள் மனதில் எவ்வாறான சுகம் வேண்டுகிறான் என்பதை யார் அறிய முடியும். இவை யாவும் மனதில் நினைக்கும் போது துக்கம் ஏற்படுகிறது. இவ்வாறான ஒரு நிகழ்வோ, நிலைமையோ ஏற்பட்டால் அவை தாங்கிக் கொள்ளும் அளவுக்கு தைரியம் இல்லை. இந்நிலையில் வெறுப்புதான் ஏற்படுகிறது.

बळें लाविता चित्त कोठें जडेना ।
समाधान तें काहिं केल्या घडेना ।।
नव्हे धीर नैनीं सदा नीर लोटे ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।३।।

பளே லாவிதா சித்த கோடே ஜடேனா ।
ஸமாதான தே காஹீ கேல்யா கடேனா ॥
நவ்ஹே தீர நைனீ ஸதா நீர லோடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 3

**சித்த** - மனம். **நைனீ** - கண்களிலிருந்து.

மனதை ஏதோ ஓர் இடத்தில் நிலை நிறுத்தலாம் என்றால் அது முடியவில்லை. மனது எந்த ஒரு செயலிலும் சமாதானம் இல்லாமல் தவிக்கிறது. என்ன செய்தாலும் சுகம் கிடைப்பதில்லை. இவை யாவும் நினைத்துப் பார்க்கையில் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக பெருகுகிறது. துக்கத்தைப் பொறுத்துக் கொள்ளும் சக்தி இல்லாமல் தவிக்கிறேன்.

अवस्था मनीं लागली काय सांगों ।
गुणीं गुंतला हेत कोण्हासी मागों ।।
बहुसाल भेटावया प्राण फूटे ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।४।।

அவஸ்தா மனீ லாகலீ காய ஸாங்கோ ।
குணீ குந்தலா ஹேத கோண்ஹாஸீ மாகோ ॥
பஹுஸால பேடாவயா ப்ராண பூடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 4

**குணீ** - அறிந்தவன், புத்திமான். **ஹேத** - இச்சை, விருப்பம்.

உன்னுடைய சந்திப்பு ஏற்படுவதற்காக நான் எவ்வாறெல்லாம் அவஸ்தைப் படுகிறேன் தெரியுமா ? நான் என்னவென்று சொல்வேன். எல்லாம் அறிந்தவனாகிய நீ வேறொருவரிடம் இருக்கிறாய். ஆகையினால் என்னுடைய விருப்பத்தை யாரிடம் கூறுவேன். எவ்வளவு வருடங்களாகிறது உன்னுடைய தரிசனம் கிடைத்து, உன்னுடைய சந்திப்பு ஏற்படுவதற்கு

என்னுடைய தேகத்தில் உள்ள உயிர் வெளிவர துடிக்கிறது. என்ன செய்வேன் ராமா ? எனக்கு இவையாவும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

कृपाळूपणें भेट रे रामराया ।
वियोगें तुझ्या सर्व व्याकूळ काया ।।
जनामाजि लौकीक हाही न सूटें ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।५।।

க்ருபாளூ பணே பேட ரே ராமராயா ।
வியோகே துஜ்யா ஸர்வ வ்யாகூல காயா ॥
ஜனமாஜி லௌகீக ஹாஹீ ந ஸூடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 5

**காயா** - சரீரம். **லௌகீக** - பிரசித்தி, கீர்த்தி.

ஏ ராமா ! நீ கிருபை புரிபவனாவாய். எனக்கு விரைவில் தரிசனம் கொடு. உன்னுடைய சந்திப்பிற்காக என்னுடைய தேகம் மிகவும் வருந்துகிறது. உன்னுடைய கீர்த்தியைப் புகழ்ந்து பாடினால் உடனே ஓடோடிச்சென்று காத்தருள்கிறாய். அதுவும் சரிதான். இருப்பினும் உன்னுடன் ஒரு கணப்பொழுதும் இல்லாமல் இருப்பது பெரும் துக்கத்தை ஏற்படுத்துகிறது. அதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

आहा रे विधी त्वां असें काय केलें ।
पराधीनता पाप माझे उदेलें ।।
बहूतांमधे चूकतां तूक तूटे ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।६।।

*ஆஹாரே விதி த்வா அஸே காய கேலே ।*
*பரா தீனதா பாப மாஜே உதேலே ॥*
*பஹுதா மதே சூகதா தூக தூடே ।*
*உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥* **6**

**விதி** - பிரம்ம தேவர். **உதேலே** - உதயமடைதல். ***சூகதா*** - தோஷம் செய்தவன், அபராதம் செய்தவன். **தூக** - எடை.

*பிரம்ம தேவனே ! நீ ஏன் இவ்வாறு செய்தாய் ? நீ என்னை பராதீனனாக்கினாய். ஆகையினால் என்னுடைய பாவங்கள் வெளியே தெரிய காரணமானாய். நான் ஒரு தவறும் செய்யாத அபராதியாக உள்ளேன். என்னுடைய தோஷம் வெளியே தெரியும் அளவுக்கு காலம் மிகவும் கொடுமையாக உள்ளது. இந்த துக்கத்தை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை.*

समर्था मनीं सांडि माझी नसावी ।
सदा सर्वदा भक्त चिंता असावी ।।
घडेना तुझा योग हा प्राप्त कोठें ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।७।।

*ஸமர்த்தா மணீ ஸாண்டி மாஜீ நஸாவீ ।*
*ஸதா ஸர்வதா பக்த சிந்தா அஸாவீ ॥*
*கடேனா துஜா யோக ஹா ப்ராப்த கோடே ।*
*உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥* 7

***ஸாண்டி*** - தியாகம்.

இங்கு 'ஸமர்த்தா' என்று ராமரை குறிப்பிடுகிறார். ஹே ராமா ! நீ எனக்கு கிடைக்காவிட்டாலும் உன்னுடைய மனதில் எனக்கு ஓர் இடம் எப்பொழுதும் நிறுத்தி வை. நீ என்னைத் தியாகம் செய்துவிடாதே. இருப்பினும் உன்னுடைய இந்த பக்தனை நினைத்து கவலைப்படுவாயாக. என்னுடைய ப்ராப்தம் இவ்வாறாக உள்ளது. எப்பொழுதும் உன்னுடைய தயை இல்லாமல் நான் அவஸ்தையுடன் வாழபோகிறேன். இந்த துக்கம்தான் தற்போது எனக்கு சொல்லொன்னா துயரத்தினைக் கொடுக்கின்றது.

अखंडीत हे सांग सेवा घडावी ।
न होतां तुझी भेटि काया पाडावी ।।
दिसें दीस आयुष्य हें व्यर्थ आटे ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।८।।

அகண்டீத ஹே ஸாங்க ஸேவா கடாவீ ॥
ந ஹோதா துஜீ பேடீ காயா படாவீ ॥
திஸே தீஸ ஆயுஷ்ய ஹே வ்யர்த்த ஆடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 8

ஆடே - நஷ்டமடைதல்.

ஏ ராமா ! நான்குவித மார்க்கத்தில் (பக்தி, ஞானம், கர்ம, யோக) உன்னுடைய பூஜைகளைச் செய்வது எல்லோருடைய கடமையாகும். அவ்வாறான பூஜையை நான் சிரத்தையுடன் செய்கின்றேன். இருப்பினும் உன்னுடைய சந்திப்பு ஏற்படாவிட்டால் என்னுடைய

தேகமானது வீழ்ந்தாலும் கவலையில்லை. காரணம் தினப்பொழுதும் உன்னுடைய தரிசனம் கிடைப்பது தவிர (சந்திப்புகிடைப்பது தவிர) வேறொன்றும் தேவை யில்லை. என்னுடைய ஆயுட்காலம் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. உன்னைவிட்டு என்னால் வாழ்வதென்பது முடியாத செயலாகும்.

भजों काय सर्वां परी हीण देवा ।
करूं काय रे सर्व माझाचि ठेवा ॥
म्हणों काय मी कर्मरेखा न लोटे ।
उदासीन हा काळ कोठें न कंठे ॥९॥

பஜோ காய ஸர்வா பரீ ஹீண தேவா ।
கரூ காய ரே ஸர்வ மாஜாசி டேவா ॥
மணோ காய மீ கர்மரேகா ந லோடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 9

ஏ ராமா ! நான் எவ்வாறு உன்னை பூஜிப்பேன் ? எவ்வித நற்குணங்களும் இல்லாத இந்த தரித்திரம் கொண்டவனாகிய எனக்கு நீ எவ்வாறு காட்சியளிப்பாய். இதில் உன்னுடைய தோஷம் ஒன்றும் இல்லை. என்னுடைய பூர்வ புண்ணிய பலத்தினால், எனக்கு கிடைத்த இந்த பாவங்கள் யாவற்றையும் நான்தான் அனுபவிக்க வேண்டும். என்னுடைய தலையெழுத்து இவ்வாறாகவே எழுதப்பட்டுள்ளது. இவை எப்பொழுதும் மறைக்கத்தகுந்ததல்ல. ராமா ! இப்பேர்ப்பட்ட இந்த துக்கத்தினை நான் எவ்வாறு சகித்துக்கொள்வேன்.

**म्हणे दास** मी वास पाहें दयाळा ।
रघुनायका भक्तपाळा भूपाळा ।।
पहावें तुला हें जिवीं आर्त मोठें ।
उदासीन हा काळ कोठें न कंठे ।।१०।।

**மணே தாஸ** மீ வாஸ பாஹே தயாளா ।
ரகுநாயகா பக்த பாளா பூபாளா ॥
பஹாவே துலா ஹே ஜீவீ ஆர்த மோடே ।
உதாஸீன ஹா காள கோடே ந கண்டே ॥ 10

**வாஸ** - வழி, மார்கம். **ஆர்த** - தளர்ந்து போதல்.

ஏ தயாளனே ! நான் உன்னுடைய தாஸன் ஆவேன். ஏ ரகுநாயகனே ! நீ பக்தர்களை நல்வழிப்படுத்திக் காத்தருள்கிறாய். நீ இப்பூவுலகையும் காத்தருள்பவனாய் திகழ்கிறாய். நீ என்னைச் சந்திக்கவில்லையென்றாலும் கூட நான் உன்னுடைய வருகையை எதிர்நோக்கி தளர்ந்து போய் உள்ளேன். காரணம், உன்னை எனது இரண்டு கண்களால் காணவேண்டும் என்பதே என்னுடைய தவிப்பு மற்றும் வேண்டுதலாகும்.

## ७. ।। रघुनायका काय कैसें करावे ।।

## 7. ரகுநாயகா காய கைஸே கராவே

उदासीन हा काळ जातो गमेना ।
सदा सर्वदा थोर चिंता शमेना ।।
उठे मानसीं सर्व सांडूनी जावें ।
रघुनायका काय कैसें करावें ।।१।।

*உதாஸீன ஹா காள ஜாதோ கமேனா ।*
*ஸதா ஸர்வதா தோர சிந்தா ஸமேனா ॥*
*உடே மானஸீ ஸர்வ ஸாண்டூனீ ஜாவே ।*
*ரகுநாயகா காய கைஸே கராவே ॥ 1*

**உதாஸீன** - விரக்த நிலை, வைராக்கியம். **கமேனா**- பிரயாணம், காலத்தை வீணாக்குதல். **ஸமேனா** - சாந்தமடைதல். **ஸாண்டூனீ** - விட்டுக் கொடுத்தல், தியாகம் செய்தல்.

ஸமர்த்தரின் மனதில் ஏற்பட்ட துக்கத்தின் விரக்த நிலையின் சாயலாக இந்த படைப்பு காணப்படுகிறது. மனம் ஒரு நிலைப்பாட்டில் இல்லாமல் காலம் வீணாகிக் கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் விட்டுச்சென்று விடலாம் எனத்தோன்றுகிறது. இந்நிலையிலிருந்து விடுதலைப் பெறலாம் என்றால் அதுவும் முடியவில்லை. ரகுநாயகனே ! நான் என்ன செய்வேன்.

जनीं बोलतां चालतां वीट वाटे ।
नसे अंतरी स्वस्थ कोठें न कंठे ।।
घडीनें घडी चित्त कीती धरावें ।
रघुनायका काय कैसें करावें ।।२।।

*ஜனீ போலதா சாலதா வீட வாடே ।*
*நஸே அந்தரீ ஸ்வஸ்த கோடே ந கண்டே ॥*
*கடீநே கடீ சித்த கீதி தராவே ।*
*ரகுநாயகா காய கைஸே கராவே ॥ 2*

**வீட வாடே** - வெறுப்படைதல். **கோடே** - வீடு. **கண்டே**- காலத்தை கழித்தல். **கடீ நே** - நொடிப்பொழுதும்.

*யாரிடமாவது பேச வேண்டும், சொல்ல வேண்டும்* என்று நினைத்தாலும் மனம் வெறுப்படைகிறது. இவ்வாறாக எல்லா விதத்திலும் காலத்தைக் கழித்தே மனம் சலிப்படைந்துள்ளது. ஒவ்வொரு நொடிப் பொழுதும் எதைப்பற்றி சிந்தனை செய்வது என்று தெரியவில்லை. *ரகுநாயகனே ! நான் என்ன செய்வேன்.*

अवस्था मनीं होय नानापरीची ।
किती काय सांगू गती अंतरीची ।।
विवेकेंचि या मानसा आवरावें ।
रघुनायका काय कैसें करावें ।।३।।

*அவஸ்தா மனீ ஹோய நாநாபரீசீ ।*
*கிதீ காய ஸாங்கூ கதீ அந்தரீசீ ॥*
*விவேகேஞ்சி யா மானஸா ஆவராவே ।*
*ரகுநாயகா காய கைஸே கராவே ॥ 3*

**நாநா பரீசீ** - பலவிதமான. **கதி** - வேகம். **மானஸா** - அந்தகரணம். **ஆவராவே** - வெளிப் படுத்துதல்.

மனதில் ஏற்பட்டுள்ள பலவிதமான அவஸ்தை களினால் அதை என்னவென்று சொல்ல முடியும் ? அதற்கு நிலையான முடிவு கிடையாது. விவேகத்தின் இந்த விளைவுகளிலிருந்து விடுவிப்பாயாக ரகுநாயகனே! நான் என்ன செய்வேன்.

विचारें तऱ्ही अंतरीं कोंड होता ।
शरीरास तो हेत सांडोनि जातो ।।
उपादीस देखोनी वाटें सरावें ।
रघुनायका काय कैसें करावें ।।४।।

விசாரே தரீ அந்தரீ கோண்ட ஹோதா ।
ஸரீராஸ தோ ஹேத சாண்டோனி ஜாதோ ॥
உபாதீஸ தேகோனீ வாடே ஸராவே ।
ரகுநாயகா காய கைஸே கராவே ॥ 4

**கோண்ட** - விலகிச்செல்லுதல். **ஹேத** - உத்தேசம். **உபாதீஸ** - கஷ்டம் உபத்திரவம், அவஸ்தை. **வாடே ஸராவே** - வழியிலிருந்து விலகுதல்.

இப்படிப்பட்ட அவஸ்தையில் இருக்கும் நான் வேறு என்ன செய்வேன். ஆகையில் விலகிச்செல்கிறேன். நான் உன்னுடையவனாவேன். ஆகவே நான் உன்னிடமே கேட்கிறேன். இப்படிப்பட்ட உன்னுடைய பக்தனின் எல்லாவிதமான கஷ்டங்களையும், உபத்திரவங் களையும் போக்கி நல்ல கதி கிடைப்பதற்கு வழி செய்வாயாக. ரகுநாயகனே ! நான் என்ன செய்வேன்.

**म्हणे दास** उदास जालों दयाळा ।
जनीं व्यर्थ संसार हा वायचाळा ।।
तुझा मी तुला पूसतों सर्वभावें ।
रघुनायका काय कैसें करावें ।।५।।

***மணே தாஸ*** *உதாஸ ஜாலோ தயாளா ।*
*ஜனீ வ்யர்த்த ஸம்ஸார ஹா வாயசாளா ॥*
*துஜா மீ துலா பூஸதோ ஸர்வபாவே ।*
*ரகுநாயகா காய கைஸே கராவே ॥ 5*

**உதாஸ** - விரக்தி. **தயாளா** - தயாளனே. **வாயசாளா** - வீணான. **பூஸதோ** - வினவுகிறேன், கேட்கிறேன். **ஸர்வபாவே** - எல்லாவிதமான எண்ணங்கள்.

ஏ தயாளனே ! உன்னுடைய தாஸனாகிய நான் மிகவும் விரக்தி அடைந்துள்ளேன். வீணான இந்த சம்ஸார பந்தத்திலிருந்து என்னை விடுவித்துக் காத்தருள்வாயாக. நீயே கதி என்று இருக்கும் என்னை வேறு யார் அறிவார். ஆகவே, எல்லாவிதமான எண்ணங்களையும் போக்கிவிடுவாயாக ரகுநாயகனே ! நான் என்ன செய்வேன்.

## ८. ।। तुजवीण रामा मज कंठवेना ।।

## 8. துஜவீண ராமா மஜ கண்டவேனா

तुझिया वियोगे जीवित्व आलें ।
शरीरपांगे बहु दुःख जालें ।।
अज्ञान दारिद्रय माझें सरेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।१।।

*துஜியா வியோகே ஜீவித்வ ஆலே ।*
*சரீரபாங்கே பஹு துக்க ஜாலே ॥*
*அக்ஞான தாரித்ரய மாஜே ஸரேனா ।*
*துஜவீண ராமா மஜ கண்ட வேணா ॥ 1*

**ஸரேனா** - விலகுதல், போக்குதல்.

ஏ ராமா ! உன்னுடைய கருணை இல்லாததன் காரணத்தினால்தான் உன்னை விட்டு விலகி இருக்கிறேன். எனக்கு ஏன் இப்படிப்பட்ட ஒரு வாழ்வு அளித்துள்ளாய் ? சரீரத்தின் சுகபோகம் சதாசர்வ காலமும் எனக்கு இருப்பதினால் எவ்வித இன்பமும் இல்லை. துக்கம் உண்டாகிறது. உடல் நலக்குறைவால் இந்த அவஸ்தை எனக்கு ஏற்பட்டுள்ளது. அக்ஞானம், தரித்திரம் என்னை விட்டு விலகாமல் துன்புறுத்துகின்றன. ராமா ! நீ என் அருகில் இல்லாதமையால் எனக்கு இப்படி ஒரு துன்பம் ஏற்படுகிறது. இதை என்னால் சிறிதளவுகூட சகித்துக்கொள்ள முடியவில்லை.

परतंत्र जीणे कंठू किति रे ।
उच्चाट माझे मनी वाटतो रे ।।
लल्लाट रेखा जपि पालटेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।२।।

*பரதந்த்ர ஜீணே கண்டூ கிதி ரே ।*
*உச்சாட மாஜே மனீ வாடதோ ரே ॥*
*லல்லாடரேகா ஜபி பாலடேனா ।*
*துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 2*

***பரதந்த்ர** - பரஸ்வாதீனம். **உச்சாட** - வெறுப்பு. **லல்லாட ரேகா** - தலைவிதி.*

*ராமா ! நான் உன் அருகில் இல்லாமையால் எனக்கு மற்றொருவரின் துணை வேண்டி செல்ல மனம் நினைக்கிறது. தேகத்தின் வாசனையால் இந்த மாயையில் வீழுந்து தவிக்கின்றேன். இவ்வாறான ஒரு வாழ்வு வாழ்வதை எண்ணி மனம் வெறுப்புக்குள்ளாகிறது. எனது தலைவிதி என்னவென்று சொல்வது ராமா ! உன்னை விட்டு எனக்கு வாழ்வதில் விருப்பம் இல்லை.*

जडली उपाधी आभिमान साधी ।
विवेक नाहीं बहुसाल बाधी ।।
स्वामीवियोगें पळही गमेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।३।।

*ஜடலீ உபாதீ அபிமான ஸாதீ ।*
*விவேக நாஹீ பஹு ஸால பாதி ॥*
*ஸ்வாமி வியோகே பல ஹீ கமேனா ।*
*துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 3*

**ஜடலீ** - ஜீவாதாரமில்லாத. **உபாதி** - அவஸ்தை, உபாதை. **கமேனா** - செல்லுதல்.

பிரபஞ்சத்தில் ஜீவாதாரமில்லாத சுழற்சியில் நான் சுழன்று அவஸ்தைப்படுகின்றேன். நான் எனது மனதை ஷட்ரிபுவாகிய காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாச்சர்யம் ஆகியவற்றில் அலை பாய்கிறது. இவற்றின் செயல்பாடுகளினால் நியாயம் - அநியாயம், சத்-அஸத், நல்லது-கெட்டது இவற்றின் வேறுபாடுகள்கூட அறியமுடியவில்லை. விவேகமானது நஷ்டம் அடைந்துள்ளது. துக்கத்தின் பிடியிலிருந்து விடுபட முடியவில்லை. இப்படியொரு நிலைமையில் உன்னை ஒரு நொடிப்பொழுதிலும் நினைக்க எனது மனதிற்கு தோன்றவில்லை. நான் என்ன செய்வேன். உன்னைவிட்டு என்னால் வாழ முடியாது.

विश्रांती देहीं अणुमात्र नाहीं ।
कुळाभिमानें पडिलों प्रवाहीं ।।
स्वहीत माझें होतां दिसेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।४।।

விச்ராந்தீ தேஹீ அணுமாத்ர நாஹீ ।
குலாபிமானே படிலோ ப்ரவ்ாஹீ ॥
ஸ்வஹீத மாஜே ஹோதா திஸேனா ।
துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 4

**அணுமாத்ர** - அணுவளவும், துளியளவும். **குலாபிமானே** - குலத்தில் பற்றுடன் இருப்பது. **ப்ரவாஹீ** - நடைமுறை, செயல்பாடு.

பரமார்த்திக சுகத்தைவிட வேறு சுகம் கிடையாது. இந்த நிலையை மறந்து, வாழ்வியல் சுகபோகத்தில் சூழ்ந்துகொண்டிருந்தமையால் இப்படிப்பட்ட இந்த தேகமானது மோக்ஷ ப்ராப்தி அடைவதற்குத் தகுதி இழந்தவனாக உள்ளேன். நல்ல குலத்தில் பிறந்த நான் ஏதும் அறியாமல் இருந்தமையாலும், விவேகத்துடன் செயல்படாதமையாலும், இதமான நடைமுறை இல்லாமையாலும் ஒன்றும் அறியாதவனாக இருந்துவிட்டேன்.

ஏ ராமா ! நான் உன்னைவிட்டு விலகியுள்ளேன். உன்மேல்கொண்ட இந்த அன்பினால் எனக்கு இவையாவும், பொறுத்துக்கொள்ள முடிகிறது. ஆகவே, நீ என்னருகில் இல்லாதமையால் எனக்கு இந்த துக்கத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை.

विषयी जनानें मज लाजविलें ।
प्रपंचसंगे आयुष्य गेलें ।।
समयीं बहु क्रोध शांती घडेना ।
तुजवीण रामा मज कंठ वेना ।।५।।

விஷயீ ஜனானே மஜ லாஜவிலே ।
ப்ரபஞ்ச சங்கே ஆயுஷ்ய கேலே ॥
சமயீ பஹு க்ரோத சாந்தி கடேனா ।
துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 5

போக சுகத்தில் மூழ்கியுள்ள மக்களின் வாழ்க்கை நடைமுறைகளைப் பார்க்கும்பொழுது கஷ்டமாக உள்ளது. பிரபஞ்சத்தின் சகவாசத்தால் ஏற்படுகின்ற சுகத்தையை நம்பி வாழ்கின்றனர். பல்வேறு சமயங்களில்

சாந்தமாகவும், நிதானமாகவும், யோசித்து முடிவுகளை எடுக்க வேண்டும். தவறினால் கோபம் ஏற்படுகின்றது. அவற்றிற்கு எல்லையில்லை. காரணம் விவேகம் இல்லாதமையால், ராமா ! எனக்கு இப்படிப்பட்ட துன்பத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை.

सुदृढ जाली देह बुद्धी देहीं ।
वैराग्य काहीं होणार नाहीं ।।
अपूर्ण कामीं मन हे विटेना ।
तुजवीण रामा मज कंठ वेना ।।६।।

ஸுத்ருட ஜாலீ தேஹ புத்தீ தேஹீ ।
வைராக்ய காஹீ ஹோணார நாஹீ ॥
அபூர்ண காமீ மன ஹே விடேனா ।
துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 6

**விடேனா** - வெறுப்பு, துயரம் .

இறைவனுடைய அருள் கிடைப்பதற்கு சுகபோகங்கள் யாவும் தியாகம் செய்யவேண்டும். விவேகத்தோடு வாழ்வது கடினமாகியுள்ளது. வைராக்கியம் கேட்கவே வேண்டாம். காரணம் மனம் எச்செயலிலும் ஈடுபட்டாலும் அவை திருப்தியுடன் செயலாற்ற முடியவில்லை. எப்பொழுதும் அதிருப்தி யுடனே காணப்படுகிறது. அப்படியிருந்தும் வெறுப்பு ஏற்படுவதில்லை. காரணம் ஏ ராமா ! நீ என் அருகில் இல்லாததினால் எனக்கு இவை யாவும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

निरूपणीं हे सद्वृत्ति होते ।
स्थळत्याग होतां सवेंचि जाते ।।
काये करु रे क्रिया घडेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।७।।

நிருபணீ ஹே ஸத்வ்ருத்தீ ஹோதே ।
ஸ்தல த்யாக ஹோதா ஸவேஞ்சி ஜாதே ॥
காயே கருரே க்ரியா கடேனா ।
துஜவீண ராமா மஜ கண்டவேனா ॥ 7

**ஸவேஞ்சி** - உடனே, வேகமாக.

கதை, கீர்த்தனம், ப்ரவசனம், கேட்பதற்கு உட்கார்ந்தால் அச்செயலில் மனம் ஒருநிலைபடுத்தப்படுகிறது. சத்சங்கத்தினால் இந்த மாறுதல் ஏற்படுகிறது. அப்பொழுது மனமானது பரமார்த்த யோகநிலை அடைகிறது. இருப்பினும் அந்த இடத்தை விட்டு விலகிச் சென்றால் மறுபடியும் பழைய நிலைக்கே செல்லத்தோன்றுகிறது. இந்திரியத்தின் செயல்பாடுகளால் இவ்வாறாக நடைபெறுகிறது. இந்நிலையிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இதனால் எந்த ஒரு செயலிலும் ஈடுபடமுடியவில்லை ராமா ! நீ தான் அதற்கு ஒரு வழிகாட்டியாக இருந்து உதவ வேண்டும். உன்னைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை.

संसार संगे बहु पीडलों रे ।
कारुण्य सिंधू मज सोडवी रे ।।
कृपा कटाक्षें सांभाळी दीना ।
तुजवीण रामा मज कंठवेना ।।८।।

ஸம்ஸார ஸங்கே பஹு பீடலோ ரே ।
காருண்ய ஸிந்து மஜ ஸோடவீரே ॥
க்ருபா கடாக்ஷே ஸாம்பாளீ தீனா ।
துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 8

***பீடலோ* - பீடை, தவிப்பு. *சோடவீ* - விடுதலை. *சாம்பாளீ* - காத்தருளுதல்.**

இந்த பிரபஞ்சத்தில் என்னைச்சுற்றி பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுவதால் அவற்றில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன். நீ கருணை கடலாக திகழ்கிறாய். தயாளனே என்னிடத்தில் தயை புரிந்து என்னை இந்த சம்ஸார சாகரத்திலிருந்து விடுவித்து காத்தருள்வாயாக. ராமா ! உன்னைவிட எனக்கு யார் இருக்கிறார்.

जय जी दयाळा त्रैलोक्यपाळा ।
भवसिंधु हारी मज तारी हेळा ।।
धारिष्ट माझें हृदयीं वसेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।९।।

ஜய ஜீ தயாளா த்ரைலோக்ய பாளா ।
பவ ஸிந்து ஹாரீ மஜ தாரீ ஹேளா ॥
தாரிஷ்ட மாஜே ஹ்ருதயீ வஸேனா ।
துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 9

***தயாளா* - தயாளனே, தயை புரிபவனே. *ஹேளா* - வித்தியாசம்.**

மூவுலகையும் காத்தருள்பவனே, தயாளனே, ராமா! உன்னை வணங்குகின்றேன். இந்த சம்ஸார சாகரத்தில் காணப்படுகின்ற எல்லா விளைவுகளிலிருந்து என்னைக்

காத்தருள்வாயாக. உன்னை நினைப்பதைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை. நீ உடனடியாக வந்து எனக்கு அருள் செய்வாய். இந்த பிரபஞ்சத்தில் ஏற்படுகின்ற எந்த ஒரு துக்கத்தையும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ரகுநாயகனே !

आम्हां अनाथां तू येक दाता ।
संसारचिंता चुकवीं समर्था ।।
**दासा मनीं** आठव वीसरेना ।
तुजवीण रामा मज कंठवेना ।।१०।।

*ஆம்ஹா அனாதா தூ யேக தாதா ।*
*ஸம்ஸார சிந்தா சுகவீ ஸமர்த்தா ॥*
***தாஸா மனீ** ஆடவ வீஸரேனா ।*
*துஜவீண ராமா மஜ கண்ட வேனா ॥ 10*

எங்களைப்போன்ற ஹீன, தீனர்களை வழிநடத்துபவனும், காத்தருள்பவனும் நீயே ஆவாய். இந்த சம்ஸாரத்தில் ஏற்படும் இன்னல்களை போக்குபவனும் நீயே, ஏனென்றால் நீ சாமர்த்தியமானவன். ராமா ! நான் உன்னுடைய தாஸன் மற்றும் தயாளன். நீ எனது மனதில் நித்யம் வாஸம் செய்து கொண்டிருக்கிறாய். நான் உன்னை என்றும் மறக்க மாட்டேன். உன்னைத் தவிர மற்றவை யாவும் வீணானதுதான். நீ இல்லாமல் என்னால் வாழ்வது மிகவும் கடினம்.

## ९. ॥ श्रीरामाचे उपकार ॥

## 9. ஸ்ரீ ராமாசே உபகார

हिणाहून मी हीण जैसा भिकारी ।
दिनाहून मी दीन नाना विकारी ॥
पतितांसि रे आणि हातीं धरावें ।
समर्था तुझें काय उत्तीर्ण व्हावें ॥१॥

*ஹிணாஹூன மீ ஹீண ஜைஸா பிகாரீ ।*
*தினாஹூன மீ தீன நானா விகாரீ ॥*
*பதிதாஸி ரே ஆணி ஹாதீ தராவே ।*
*சமர்த்தா துஜே காய உத்தீர்ண வாவே ॥ 1*

ஹே ராமா ! நான் ஹீனனாகவும், தீனனாகவும் இருக்கின்றேன். என்னுடைய தோற்றம் பிச்சைக்காரன் போன்று காணப்படுகிறது. ஒவ்வொறு தினப்பொழுதும் என்னுடைய நிலை மாறுபட்டதாகவே உள்ளது. சாமர்த்தியவானாகிய நீ என்னை கடைத்தேற்றுவதில் உனக்கு என்ன குறைவு ஏற்படும் என நினைக்கின்றாய். என்னைப் போன்ற பாவிகளை கைவிட்டுவிடாதே ராமா! காத்தருள்வாயாக.

जनी भक्ति नाहीं मनी भाव नाहीं ।
मला युक्ति ना बुद्धी काहींच नाहीं ॥
कृपाळूपणे राज्य रंकासी द्यावें ।
समर्था तुझें काय उत्तीर्ण व्हावें ॥२॥

ஜனி பக்தி நாஹீ மனீ பாவ நாஹீ ।
மலா யுக்தி நா புத்தி காஹீஞ்ச நாஹீ ॥
க்ருபாளூபணே ராஜ்ய ரங்காஸீ த்யாவே ।
சமர்த்தா துஜே காய உத்தீர்ண வாவே ॥ 2

ஹே ராமா ! மக்கள் அனைவரும் என்னை இவ்வாறு வசைபாடுகிறார்கள். இவன் பெயரளவிலேயே ராமனின் தாஸன் என்று கூறிக்கொள்கிறான். ஆனால் இவனிடத்தில் பக்தியில்லை. மனதில் நல்ல எண்ணங்கள் கிடையாது. நல்ல யுக்திகளை கையாளுவதற்கான புத்தியும் இல்லை என்று கூறுகிறார்கள். ராகவனே ! நான் உன்னிடத்தில் வைத்துள்ள ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாட்டை இவர்கள் அறியமாட்டார்கள். அவர்களுடைய பார்வையில் பிச்சைக்காரனாக தோற்றமளித்தாலும் நான் உன்னுடைய தாஸனாகத்தான் இருப்பேன். இவ்வாறான என்னை கைவிட்டு விடாதே ராமா! காத்தருள்வாயாக.

बहुसाळ अन्याय कोट्यानुकोटी ।
रघुनायकें घातले सर्व पोटीं ।।
किती काय गूणासि म्यां आठवावें ।
समर्था तुझें काय उत्तीर्ण व्हावें ।।३।।

பஹுஸாள அன்யாய கோட்யானுகோடீ ।
ரகுநாயகே காதலே ஸர்வ போடீ ॥
கிதீ காய குணாஸி ம்யா ஆடவாவே ।
சமர்த்தா துஜே காய உத்தீர்ண வாவே ॥ 3

ஹே ப்ரபோ ! பல வருடங்களாக இந்த இன்னல்களை-அநியாயங்களை நான் யாரிடமும் கூறாமல் எனக்குள்ளேயே

வைத்துக்கொண்டு பொறுமுகின்றேன். இப்பேர்ப்பட்ட இன்னல்கள் எவ்வளவு என்றும் என்னவென்றும் கூற முடியும்? அதைப்பற்றி இப்போது நான் ஏன் நினைக்க வேண்டும் ? எல்லாம் வல்ல ராமனே ! நீ என்னை காத்தருள்வாயாக.

समर्थें दिलें सौख्य नाना परी चें ।
सदा सर्वदा जाणसी अंतरी चें ॥
लळे पाळिलें तूं कृपाळू स्वभावें ।
समर्था तुझें काय उत्तीर्ण व्हावें ॥४॥

*சமர்த்தே திலே ஸெளக்ய நாணா பரீசே ।*
*சதா ஸர்வதா ஜானஸீ அந்தரீ சே ॥*
*லளே பாளிலே தூ க்ருபாளூ ஸ்வபாவே ।*
*சமர்த்தா துஜே காய உத்தீர்ண வாவே ॥* **4**

ஹே ராமா ! நீ எனக்கு நல்ல புத்தியை தந்தருளினாய். ஆகையினால் உன்னுடைய நல்ல குணங்களை நான் அறிந்து கொள்ள முடிந்தது. என்னுடைய மனதில் இருந்த வேதனையை நீ அறிந்து கொண்டாய். ஆகையினால் என்னுடைய மனம் தெளிவுபெற்றது. தற்போது உன்னிடத்தில் நான் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. நீ எப்பொழுதும் கருணை புரிபவனாவாய். எல்லாம் வல்ல ராமனே என்னை கடைத்தேற்றுவாயாக !

दिनानाथ हे ब्रीद त्वां साच केलें ।
म्हणे दास भक्तांसिरे उद्धरीलें ।।
सुखें सांडणें या देहाचें करावें ।
समर्था तुझें काय उत्तीर्ण व्हावें ।।५।।

தினா நாத ஹேற ப்ரீத த்வா ஸாச கேலே ।
மணே தாஸ பக்தாஸிரே உத்தரீலே ॥
சுகே ஸாண்டணே யா தேஹாசே கராவே ।
சமர்த்தா துஜே காய உத்தீர்ண வாவே ॥ 5

தீனர்களை ரக்ஷித்து காத்தருளுபவனே ! அதைக் குறிக் கோளாகக் கொண்டவனே ! உன்னுடைய தாஸனாகிய நான் கூறுகின்றேன். நீ எப்பேர்ப்பட்ட பக்தர்களையும் காத்தருளுபவன். எப்பொழுதும் சுகத்தினை உடலாலும், உள்ளத்தினாலும் கொடுக்கும் ஆற்றல் உன்னைத்தவிர வேறு எவருக்கும் கிடையாது. அப்பேர்ப்பட்ட சாமர்த்திய வானாகிய ராமா ! என்னை காத்தருள்வாயாக.

## १०. ॥ सर्वोत्तमा कैं मज भेटि देसी ॥

## 10. ஸர்வோத்தமா கை மஜ பேடீ தேஸீ

दुःखा नळें मी संतप्त देहीं ।
तुजवीण रामा विश्रांति नाहीं ॥
आधार तूझा मज मी विदेसीं ।
सर्वोत्तमा कैं मज भेटि देसी ॥ ॥१॥

துக்கா நளே மீ ஸந்தப்த தேஹீ ।
துஜவீண ராமா விஸ்ராந்தி நாஹீ ॥
ஆதார தூஜா மஜ மீ விதேஸீ ।
ஸர்வோத்தமா கை மஜ பேடீ தேஸீ ॥ 1

இந்த பூவுலகில் துக்கத்தினால் நான் மிகவும் துயரம் அடைந்துள்ளேன். ராமா உன்னைத் தவிர எனக்கு வேறு கதி யில்லை. அது என்னுடைய மனதிற்கு ஏற்படும் ஓர்அமைதி யாகும். அது உன்னால் மட்டுமே அளிக்க முடியும். உன்னிடத்தில் ஏற்படும் சகவாசத்தினால் மனதில் ஏற்படும் சஞ்சலமானது விலகி நற்பலன்களை அளிக்கவல்லது. அப் பேற்பட்ட சர்வோத்தமான நீ எனக்கு எவ்வாறு காட்சி அளிப்பாய்.

प्रारब्ध खोटें अभिमान आला ।
स्वामी समर्थासी वियोग जाला ॥
तेणे बहुक्षीति वाटें मनासी ।
सर्वोत्तमा कैं मज भेटि देसी ॥ ॥२॥

ப்ராரப்த கோடே அபிமான ஆலா ।
ஸ்வாமி ஸமர்த்தாஸி வியோக ஜாலா ॥
தேனே பஹு க்ஷீதி வாடே மனாஸீ ।
ஸர்வோத்தமா கை மஜ பேடீ தேஸீ ॥ 2

ராமா ! என்னுடைய தலைவிதி பொய்யானதாக எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் உன்னிடத்தில் எனக்கு பாசம் (அன்பு) ஏற்படுகிறது. இதிலும் எவ்விதமான அகந்தையில்லாத ஆழ்ந்த பக்தியினால் வெளிப்படும் அன்பாகவே வெளிப்படுகிறது. இருப்பினும் இந்த விஷயம் மனதிற்கு மிகவும் துயரம் அளிக்கவல்லது. சர்வோத்தமனான நீ தரிசனம் அளித்தால் மட்டுமே இந்த நிலையிலிருந்து என்னால் மாற முடியும். ஆகவே ராமா ! நீ என்னை காத்தருள்வாயாக.

तुझीया वियोगे बहु वेदनारे ।
विवेक नाहीं आम्हा दिनारे ।।
पडिला समंधु या दुर्जनासी ।
सर्वोत्तमा कैं मज भेटि देसी ।।३।।

துஜீயா வியோகே பஹு வேதனாரே ।
விவேக நாஹீ ஆம்ஹா தினாரே ॥
படிலா ஸமந்து யா துர்ஜநாஸீ ।
ஸர்வோத்தமா கை மஜ பேடீ தேஸீ ॥ 3

உன்னுடைய அருள் கிடைக்க வேண்டி பல சாது புருஷர்கள் யாவரும் மன வேதனையுடன் காணப் பட்டார்கள். இவ்வாறாக மக்களிடத்திலும் விவேக-புத்தி நஷ்டமடைந்த காரணத்தினால் அவர்களும் துயரத்துடன் காணப்பட்டார்கள். இந்நிலையாவும், நான் பல்வேறு

இடங்களில் யாத்திரை மேற்கொண்ட சமயத்தில் பலபேர்கள் உண்மையான சகவாசம் என் மீது வைத்ததின் காரணமாக அவர்களின் நிலைப்பாடு என்னவென்று எனக்கு புரிய வந்தது. அப்பேர்ப்பட்ட மக்களின் துயரத்தினை போக்கியும் சர்வோத்தமனான நீ என்னையும் காத்தருள்வாயாக.

संसार चिंता मज वाटते रे ।
रामा प्रपंची मन जातसेरे ।।
संसर्ग आहे इतरा जनासी ।
सर्वोत्तमा कैं मज भेटि देसी ।। ।।४।।

ஸம்ஸார சிந்தா மஜ வாடதே ரே ।
ராமா ப்ரபஞ்சி மன ஜாதஸேரே ॥
ஸம்ஸர்க ஆஹே இதரா ஜனாஸீ ।
ஸர்வோத்தமா கை மஜ பேடீ தேஸீ ॥ 4

இவ்வுலகில் வாழும் அன்றாட மக்களின் துயர நிலை என்னால் அறிய முடிகிறது. காரணம் அவர்கள் ஷட் விகாரங்களிலிருந்து விலகிச் செல்லும் மன நிலையோடு இல்லாமல், சதாசர்வ காலமும் பல்வேறு ஆசா-பாசங்களை மனதில் நிலை நிருத்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன், பிறரிடம் த்வேச பாவங்களினாலும் (பொறாமை எண்ணங்களுடன்) விவேகம், வைராக்கியம் தவிர்த்து அவர்களுடைய வாழ்வியல் முறை காணப்படுகிறது. இப்பேர்ப்பட்ட நிலையை போக்க சர்வோத்தமனாகிய ராமா! நீ காத்தருள்வாயாக.

# ११. ॥ श्री समर्थांची इच्छा ॥

## 11. ஶ்ரீ ஸமர்த்தாஞ்சி இச்சா

सीवणा मनाचा विपरीत वाणा ।
उदास वाटे बहुसाळ प्राणा ॥
मग राघवा रे तुज बाहिलों रे ।
कृपाळुवे सत्वर पाहिलों रे ॥१॥

*ஸிவணா மனாசா விபரீத வாணா ।*
*உதாஸ வாடே பஹுஸாள ப்ராணா ॥*
*மக ராகவா ரே துஜ பாஹிலோ ரே ।*
*க்ருபாளுவே ஸத்வர பாஹிலோ ரே ॥ 1*

***சிவணா*** - கனவு. ***விபரீதபாணா*** - விசித்திரம். ***பஹுசாள*** - பல வருடங்கள். ***பாஹீலோ*** - கூக்குரல். ***பாஹீலோ*** - பார்வையடுதல். ***சத்வர*** - உற்சாகம்.

பல வருடங்களாக மக்கள் பலவாறாக கனவு கண்டவாறு தங்கள் வாழ்க்கையை வெறுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறார்கள். ஆகவே, ஹே ராகவேனே ! நீ இவர்களின் மீது உனது கருனையான பார்வையினை செலுத்தி காத்தருள்வாயாக.

देवें दयाळे करुणा करावी ।
भक्ताभिमाने भरणी भरावी ॥
हे रामनौमी तरणी तरावी ।
दासा समस्तां वरणी वरावी ॥२॥

தேவே தயாளே கருணா கராவீ ।
பக்தாபிமானே பரணீ பராவீ ॥
ஹே ராம நௌமீ தரணீ தராவீ ।
தாஸா ஸமஸ்தா வரணீ வராவீ ॥ 2

**பக்தாபிமானே** - பக்தனை அரவனைத்தல். **பரணீ**- காத்தல். **தரணீ** - ஓடம். **வரணீ** - அனுஷ்டானம். **வராவீ**- நியமனம்.

ஹே தயாளனே ! என் மீதும், பக்தனின் மீதும் அரவனைப்போடு கருணை உள்ளத்தோடு காத்தருள்வாய், அதே எண்ணத்துடன் அவர்களை வழி நடத்துவாய். ராம நாமம் என்னும் ஓடத்தின் மூலமாக நான் ஒருவன் மட்டும் அல்லாது உன்னுடைய பக்தர்கள் அனைவரையும் நாமத்தின் மகிமையால் பக்தியின் வழி காட்டுதலுடன் இந்த பிறவிக் கடலை கடப்பதற்கு துணை புரிவாய்.

रघुनाथ दासा कल्याण व्हावे ।
अति सौख्य व्हावे आनंद वावे ।।
उद्वेग नासो वर शत्रु नासो ।
नाना विलासे मग तो विळासो ।।३।।

ரகுநாத தாஸா கல்யாண வாவே ।
அதி ஸௌக்ய வாவே ஆனந்த வாவே ॥
உத்வேக நாஸோ வர ஸத்ரு நாஸோ ।
நானா விலாஸே மக தோ விளாஸோ ॥ 3

**கல்யாண** - சுபம், நன்மை. **அதி** - அதிகம், நிறைய. **நாஸோ** - நஷ்டமடைதல். **வர** - அத்துடன். **சத்ரு** - ஆறு விகாரம் (காமம், க்ரோதம், மோகம், லோபம், மத, மாச்சர்யம்).

ஹே ராமா ! உன்னுடைய தாஸனாகிய என்னைப் போன்ற யாவரையும் சுகமாகவும், ஆனந்தமாகவும் வாழ் வதற்கு துணை புரிவாய். என்னுடைய எல்லாவிதமான பாபங்களை நஷ்டமடைய செய்து அத்துடன் ஆறு விகாரங்களிலிருந்து விடுவித்து மற்றும் எல்லாவிதமான நன்மையையும் கிடைக்க வழிவகுப்பாயாக.

कोडें नको रे कळहो नको रे ।
कापट्य कर्मी सहसा नको रे ।।
निर्वाण चिंता निरसी अनंता ।
शरणागतां दे बहु धात माता ।।४।।

கோடே நகோரே களஹோ நகோ ரே ।
காபட்ய கர்மீ ஸஹஸா நகோ ரே ॥
நிர்வாண சிந்தா நிரஸீ அனந்தா ।
ஸரணாங்கதா தே பஹு தாத மாதா ॥ 4

**கோடே** - இடையூறு. **களஹோ** - சண்டை. **காபட்ய** - பொய்யான. **நிர்வாண சிந்தா** - இறப்பின் கவலை.

தங்களுடைய சங்கடங்களைப் போக்குவதற்காக, சண்டை சச்சரவு மேற்கொண்டவர்கள் யாவரும், கர்ம அனுஷ்டானங்களை முறையாக செய்யாமல், பொய்யான தோற்றத்தினை உருவாக்கி, இறப்பு காலத்தில் ஏற்படும் பயத்திலிருந்து விடுபடுவதற்காக மட்டும் உன்னுடைய சரணத்தில் அடிபணிந்தும் உண்மை நிலை அறிந்த பலபேர் நற்கதி அடைந்துள்ளனர்.

अजयो न हो रे जयवंत हो रे ।
आपदा न को रे बहु भाग्य होरे ।।
श्रीमंतकारी जनहीत कारी ।
परऊपकारी हरि दास तारी ।।५।।

அஜயோ ந ஹோரே ஜயவந்த ஹோ ரே ।
ஆபதா ந கோ ரே பஹூ பாக்ய ஹோ ரே ॥
ஶ்ரீமந்தகாரீ ஜனஹீத காரீ ।
பரஊபகாரீ ஹரி **தாஸ** தாரீ ॥ 5

**ஜயவந்த** - வெற்றி. **ஆபதா** -சங்கடம். **பாக்ய** - வைபவம், ஐஸ்வர்யம். **காரீ** - நடத்துபவன்.

உன்னுடைய பக்தனுக்கு வெற்றிபெற முடியா விட்டாலும், வெற்றி பெற வழி செய்வாய். உன்னுடைய சந்திப்பினால் அவர்களுடைய தடைகளை போக்கியும், தலைவிதியை மாற்றியும், நன்மை செய்வாயாக. கருணை காட்டுவாயாக. நீ உன்னுடைய தாஸனை ஒரு பொழுதும் கைவிட மாட்டாய் என்கிற நம்பிக்கையுடன் ராமதாஸனாகிய நான் இருக்கிறேன். ஹே ராமா ! காத்தருள்வாயாக.

## १२. ।। श्री समर्थांनी केलेली श्रीरामाची प्रार्थना ।।

## 12. ஸ்ரீ ஸமர்த்தானீ கேலேலீ ஸ்ரீராமாசீ ப்ரார்த்தனா

कल्याण करी रामराया । जनहित विवरीं ।।ध्रृ।।
तळमळ तळमळ होतचि आहे । हे जन हातिं धरी ।।१।।

*கல்யாண கரீ ராமராயா । ஜனஹீத விவரீ । த்ரு*
*தளமள தளமள ஹோதசீ ஆஹே ।*
*ஹே ஜன ஆதி தரீ ॥* **1**

अपराधी जन चुकतचि गेले । तुझा तूंची सावरी ।।२।।

*அபராதி ஜன சுகதசி கேலே ।*
*துஜா தூஞ்சீ ஸாவரீ ॥* **2**

कठिण त्यावरी कठीण जालें । आतां न दिसे उरी ।।३।।

*கடீண த்யாவரீ கடீண ஜாலே ।*
*ஆதா ந திஸே உரீ ॥* **3**

कोठें जावें काय करावे । आरंभिली बोहरी ।।४।।

*கோடே ஜாவே காய கராவே ।*
*ஆரம்பிலீ போஹரீ ॥* **4**

दासम्हणे आम्ही केलें पावलों । दयेसि नाहीं सरी ।।५।।

*தாஸ மணே ஆம்ஹீ கேலே பாவலோ ।*
*தயேஸி நாஹீ ஸரீ ॥* **5**

# १३. उपसंहार

## 13. உபஸம்ஹார

अनाथ मी हीन दीन दरिद्री भजन नेणें कांहीं ।
तुजविण मज या जगीं पाहता कोणीच नाहीं ।।

அநாத மீ ஹீன தீன தரித்ரீ பஜன நேணே காஹீ ।
துஜவிண மஜ யா ஜகீ பாஹதா கோணீச நாஹீ ॥

ज्ञान कळेना ध्यान कळेना मन वळेना देवा ।
विद्या नाहीं वैभव नाहीं ऐसा पूर्वील ठेवा ।।

ஞான களேனா த்யான களேனா மன வளேனா தேவா ।
வித்யா நாஹீ வைபவ நாஹீ ஐஸா பூர்வீல டேவா ॥

युक्ति असेना बुद्धि असेना शांति वसेना आंगीं ।
**रामदास** म्हणे दयाळा ऐसा मी भवरोगी ।।

யுக்தி அஸேனா புத்தி அஸேனா சாந்தி வஸேனா ஆங்கீ ।
ராமதாஸ மணே தயாளா ஐஸா மீ பவரோகீ ॥

रामा रामा रामा रामा रघुनंदना । रामा रघुनंदना ।।
रामा रामा रामा रामा कुळभूषना ।।१।।

ராமா ராமா ராமா ராமா ரகுநந்தனா । ராமா ரகுநந்தனா ।
ராமா ராமா ராமா ராமா குலபூஷணா ॥ 1

रामा रामा रामा रामा जानकीपते । रामा जानकीपते ।।
रामा रामा रामा रामा विमलमते ।।२।।

ராமா ராமா ராமா ராமா ஜானகிபதே । ராமா ஜானகிபதே ।
ராமா ராமா ராமா ராமா விமலமதே ॥ 2

रामा रामा रामा रामा दीनवत्सला । रामा भक्तवत्सला ।।
रामादास म्हणे तुझी अगम्य लीला ।।३।।

ராமா ராமா ராமா ராமா தீனவத்ஸலா । ராமா பக்தவத்ஸலா ।
ராமதாஸ மணே துஜீ அகம்ய லீலா ॥ 3

रामा रामा रामा रामा रामा हो । जय रामा हो ।।
तारी तारी तारी तारी आम्हा हो ।।१।।

ராமா ராமா ராமா ராமா ராமா ஹோ । ஜய ராமா ஹோ ।
தாரீ தாரீ தாரீ தாரீ ஆம்ஹா ஹோ ॥ 1

तोडी तोडी तोडी तोडी भवपाश । रामा भवपाश ।।
अनन्य शरण रामी रामदास ।।२।।

தோடீ தோடீ தோடீ தோடீ பவபாச । ராமா பவபாச ।
அனன்ய சரண ராமீ ராமதாஸ ॥ 2

राम राम राम जप सीताभिराम । जप सीताभिराम ।।
राम राम राम जप सीताभिराम । राजा ।।

ராம ராம ராம ஜப ஸீதாபிராம । ஜப ஸீதாபிராம ॥
ராம ராம ராம ஜப ஸீதாபிராம । ராஜா ॥

सज्जनगड निवास माझे रामदास माये । माझे रामदास माये ।।
रामदासमाये । माझे रामदासमाये ।।

ஸஜ்ஜனகட நிவாஸ மாஜே ராமதாஸ மாயே ।
மாஜே ராமதாஸ மாயே । ராமதாஸ மாயே
மாஜே ராமதாஸ மாயே ॥

श्रमहरणी निवास माझे कल्याण माये । माझे कल्याण माये ।
कल्याण माये । माझे कल्याण माये ।।

ச்ரமஹரணீ நிவாஸ மாஜே கல்யாண மாயே ।
மாஜே கல்யாண மாயே । கல்யாண மாயே
மாஜே கல்யாண மாயே ॥

शरयूतीर निवास माझे रामचंद्र माये । माझे रामचंद्र माये ।
रामचंद्र माये । माझे रामचंद्र माये ।।

சரயூதீர நிவாஸ மாஜே ராமசந்த்ர மாயே ।
மாஜே ராமசந்த்ர மாயே । ராமசந்த்ர மாயே
மாஜே ராமசந்த்ர மாயே ॥

।। सीताकांतस्मरण जय जय राम ।।

।। सद्गुरु श्री समर्थरामदासस्वामीमहाराजकी जय ।।

।। महारुद्र हनुमान की जय ।।

।। श्रेष्टगंगाधर स्वामी महाराज की जय ।।

।। सद्गुरु श्री भीमराज गोस्वामी की जय ।

।। जय जय रघुवीर समर्थ ।।

॥ ஸீதாகாந்தஸ்மரண ஜய ஜய ராம ராம ॥

॥ ஸத்குரு ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸ ஸ்வாமி மகராஜ கீ ஜய ॥

॥ மஹாருத்ர ஹனுமான கீ ஜய ॥

॥ ஸ்ரேஷ்ட கங்காதர ஸ்வாமீ மஹாராஜ கீ ஜய ॥

॥ ஸத்குரு ஸ்ரீ பீமராஜ கோஸ்வாமீ கீ ஜய ॥

॥ ஜய ஜய ரகுவீர ஸமர்த்த ॥